பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஆவணி 11 புதன்கிழமை 28.08.2019 | கதிர் 296

## இது ரகசியம் அல்ல!

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் மூத்த அமைச்சர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தேன்.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அபூர்வமான ஒரு போக்கு தென்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

"ஜனாதிபதி பக்கம் 02 >>>

# ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதே எனது முடி நோக்கம்!

## சஜித் பிரேமதாஸ திட்டவட்ட அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 28

அதிகபட்சமாக ஒருமித்த இலங்கைக்குள் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதே தனது நோக்கம் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார் அமைச்சர் சஜித் பிரேமதாஸ.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்துக் கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனை கூறினார். பக்கம் 11 >>>

## மாலைதீவு செல்கிறார் ரணில்



கொழும்பு, ஓக. 28

மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹீம் மொஹமட் சோலியின் அழைப்பை ஏற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, செப்ரெம்பர் 02ஆம் திகதி மாலைதீவுக்குப் பயணமாகிறார்.

இந்தப் பயணத்தின் போது, இரு நாடுகளுக்கு இடையி பக்கம் 11 >>>

## வடக்கு, கிழக்கில் இராணுவக் கெடுபிடிகளை அகற்ற இன்றைய சந்திப்பில் தமிழ் கூட்டமைப்பு வலியுறுத்தும்



கொழும்பு,ஓக.28

வடக்கு – கிழக்கில் இராணுவ முகாம்களை அகற்றாமல், இராணுவக் கெடுபிடிகளை அதிகரிக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளை வன்மையாக கண்டிப்பதாகவும், இன்று காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இது குறித்துக் கலந்துரையாடு பக்கம் 11 >>>

## கை – மொட்டு பேச்சு வெற்றி!

### மைத்திரி – மஹிந்த நேரில் சந்திக்க இணக்கப்பாடு

கொழும்பு, ஓக. 28

ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட இனிமேல் நடைபெறவுள்ள அனைத்துத் தேர்தல்களையும் ஓரணியில் எதிர்கொள்ளும் வகை பக்கம் 11 >>>

## இன்டர்போல் செயலாளர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, ஓக. 28

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்தல் உள் பக்கம் 11 >>>

## மைத்திரிபாலவைச் சந்தித்தார் புதிய தளபதி சவேந்திர சில்வா!



கொழும்பு, ஓக. 28

இலங்கை இராணுவத்தின் 23ஆவது இராணுவத்தளபதியாக நியமிக்கப்பட்ட ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பக்கம் 11 >>>

## உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி இன்று ஆரம்பம்

G.C.E (A/L)

கொழும்பு,ஓக.28

பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்திருத்தும்பணிகள் இன்று ஆரம்பமாகின்றன எனபரீட்சைகள்திணைக்களம் அறிவித் பக்கம் 11 >>>

## சஜித்தை விட கருவுக்கே மக்கள் ஆதரவு அதிகமாம்

### கருத்துக் கணிப்பில் தகவல்





கொழும்பு,ஓக.28

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சஜித் பிரேமதாசாவை விட, கரு ஜெயசூரியாவுக்கே அதிக மக்கள் ஆதரவு உள்ளதாகப் பக்கம் 11 >>>

## சஜித்தின் சகாக்களை குறிவைக்கிறார் ரணில்

### ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 28

அச்சர்களான சுஜீவ சேனசிங்க, அஜித் பி. பெரேரா ஆகியோருக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

கட்சித் தலைமைக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்து கட்சியின் யாப்பைமீறும் வகையில் செயற் பக்கம் 11 >>>

## கோட்டாவின் பக்கம் பாய்கிறார் முன்னாள் வடக்கு ஆளுநர் குரே



கொழும்பு,ஓக.28

தான் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து கொள்ளப் போகிறார் என முன்னாள் வட மாகாண ஆளுநரும் பக்கம் 11 >>>

## ஐ.தே.முன்னணிப் பங்காளிக் கட்சிகளின் கூட்டம் நேற்றும் வேட்பாளர் குறித்து முடிவேதுமின்றி முடிவு

கொழும்பு,ஓக.28

ஐக்கிய தேசிய முன்னணியிலுள்ள கட்சிகளின் தலைவர்களுக்கு இடையில் நேற்று இரவு சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற சந்திப்பு, ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எந்தவித முடிவுகளும் இன்றி நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று அறிவிக்கப்படாத நிலையில், சில கட்சிகள் தமது வேட்பாளரை பக்கம் 11 >>>

# வாக்குறுதிகளை நம்ப நாங்கள் தயாரில்லை!

## பேராயர் மல்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 28

தேர்தலுக்கு முன்னனர் பல்வேறு தரப்பினர் வழங்கும் வாக்குறுதிகளில் மாத்திரம் நம்பிக்கை வைத்திருக்க முடியாது எனப் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

தாம் ஆட்சிக்கு வந்தவுடன், ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க சுயாதீன ஆணைக்குழுவை நியமிப்பதாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இவ்வாறான வாக்குறுதிகளில் மாத்திரம் நம்பிக்கை வைத்து ஒரு தரப்பினருக்கு நாம் ஆதரவு அளிக்க முடியாது. யார் என்ன கூறினாலும், மக்கள் நடுநிலையாகத் தீர்ப்பு வழங்க வேண்டும். தேர்தல் நெருங்கும் இந்த நேரத்தில் அதிகாரத்தை பெற்றுக்கொள்ளவே பலரும் முயற்சிக்கின்றனர்.

எமது கோரிக்கைக்கு எதிரணியினர் இவ்வாறான கருத்தொன்றை வழங்கியுள்ள நிலையில், அதனைவிடச் சிறந்த ஒரு நிலைப்பாட்டை ஆட்சியில் உள்ளவர்கள் வெளிப்படுத்த வேண்டும். இந்த விடயம் தொடர்பில் நாம் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்துக்கு அவ்வளவு சிறந்த பதில் எதுவும் கிடைக்கவில்லை – என்றார். (ஐ)

# யாழ்ப்பாணம் சுற்றுலா வந்த வெளிநாட்டவரை தாக்கிப் பணம், கைத்தொலைபேசி அபகரிப்பு

## சந்தேகநபருக்கு விளக்கமறியல்

வெளிநாட்டவர் ஒருவரைத் தாக்கி அவரது அலைபேசி மற்றும் 54 ஆயிரம் பணம் என்பவற்றை அபகரித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை வரும் செப்ரெம்பர் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

வெளிநாட்டவரையே தாக்கி – அச்சுறுத்தி அவரது உடமைகளை அபகரிக்கும் நீர், நம் நாட்டவர்களைச் சும்மாவா விடுவீர்? வெளிநாட்டவர்கள் இங்குள்ளவர்களை நம்பியே சுற்றுலாப் பயணம் வருகின்றனர் என்று சந்தேகநபரை நீதிவான் கண்டித்தார்.

அத்துடன், சந்தேகநபரிடமிருந்து மீட்ட அலைபேசியை உரிய வெளிநாட்டவரிடம் மீள வழங்கிய மன்று, விசாரணைகளைத் துரிதமாக முன்னெடுக்கப் பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

சுற்றுலாப் பயணியாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து நகரில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த வெளிநாட்டவர் ஒருவரைத் தாக்கிய நபர் அவரது அலைபேசி மற்றும் 54 ரூபா பணத்தை அபகரித்துத் தப்பித்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வெளிநாட்டவர் முறைப்பாடு வழங்கினார். அவரது முறைப்பாட்டையடுத்து சிசிரிவி கமரா பதிவு ஊடாகக் கொள்ளையரை அடையாளம் கண்ட பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

பண்டத்தரிப்பு பனிப்புலத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டவரிடம் அபகரித்த அலைபேசி மீட்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை முற்படுத்தப்பட்டார். முறைப்பாட்டாளரான வெளிநாட்டவரும் மன்றில் முன்னிலையானார்.

வழக்கை விசாரித்த நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல், சந்தேகநபரைக் கண்டித்தமையுடன், அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். அத்துடன், வெளிநாட்டவரின் அலைபேசியை மீள வழங்கவும் மன்று அறிவுறுத்தல் விடுத்தது. மன்றின் முன்னிலையில் வெளிநாட்டவரிடம் அலைபேசி மீள ஒப்படைக்கப்பட்டது. (ஐ-07)

# தேர்தலில் யாருக்கு ஆதரவு? இறுதிநேரமே அறிவிப்பேன்

## கூறினார் ஜனாதிபதி மைத்திரி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்து இறுதி நேரத்தில் தீர்மானிக்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்களைச் சந்தித்து பேச்சு நடத்தியபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டையும் அதன் பொருளாதாரத்தையும் ஐக்கிய தேசியக் கட்சி மோசமடையச் செய்துவிட்டதாகவும் கூட்டு எதிர்க்கட்சியும் கொள்கைகள் இன்றிச் செயற்படுவதாகவும் ஜனாதிபதி இதன்போது சாடியுள்ளார்.

நாட்டுக்கு நன்மை செய்யக் கூடிய வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்ய நிதானமாக யோசித்து சுதந்திரக்கட்சி தனது நிலைப்பாட்டை அறிவிக்குமென்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார். (ஐ)

# ஈஸ்டர் குண்டுதாரியின் உடல் இந்து மயானத்தில் புதைப்பு!

## எதிர்த்து மக்கள் போராட்டம்

மட்டக்களப்பு, ஓக. 28

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த முகமட் ஆசாத் என்பவரின் தலை மற்றும் உடற்பாகங்களை மட்டு. கள்ளியங்காடு இந்து மயானத்தில் பொலிஸார் புதைத்ததை எதிர்த்து பொதுமக்கள் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை மயானத்தின் முன் வீதியை மறித்து வீதியில் அமர்ந்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மக்களை அடக்கப் பொலிஸார் நீர்த்தாரகை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகங்களை முன்னெடுத்தனர்.

ஏப்ரல் 21 ஆம் திகதி உயித்த ஞாயிறு தினத்தில் தற்கொலை குண்டுதாக்குதலில் சிதறிக் கிடந்த தலை மற்றும் உடற்பாகங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த உடற்பாகங்கள் தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட 34 வயதுடைய காத்தான்குடியைச் சேர்ந்த முகமது ஆசாத் என்பவரது என்று டி.என்.டி பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து அந்த உடற்பாகங்களைப் பொது மயானத்தில் அரச செலவில் புதைக்குமாறு அரச அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனைக் கடந்த ஜூன் 11 ஆம் திகதி மட்டக்களப்பு புதூர் ஆலையடி மயானத்தில் புதைக்கப் பொலிஸார் முற்பட்டபோது பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்தமையையடுத்து அங்கு புதைப்பது கைவிடப்பட்டது.

தொடர்ந்து கள்ளியங்காடு மயானத்தில் புதைக்க முற்பட்டபோது பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தினால் அதுவும் கைவிடப்பட்ட நிலையில் காத்தான்குடிப் பிரதேசத்தில் புதைக்க முற்பட்டபோது அங்கும் மக்கள் ஆர்ப்பாட்டத்தால் அது கைவிடப்பட்டது.

இந்த நிலையில் தொடர்ந்தும் உடற்பாகங்கள் வைத்தியசாலை பிரேத அறையில் இருந்தன, நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கள்ளியங்காடு இந்து மயானத்தில் இந்த உடற்பாகங்களைப் பொலிஸார் புதைத்துள்ளனர்.

இது தொடர்பாக பிரதேச மக்களுக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை தெரியவந்ததையடுத்து அந்த மயானத்துக்கு முன் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் மற்றும் பொதுமக்கள் ஒன்று திரண்டனர் மட்டக்களப்பு – திருகோணமலை வீதியில் ரயர்கள் எரிக்கப்பட்டு வீதியில் அமர்ந்து அவர்கள் போராடினர். புதைக்கப்பட்ட உடற்பாகங்களை உடனடியாகத் தோண்டி எடுக்குமாறு கோரி அவர்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அந்த பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. பாதுகாப்பு தரப்பினர் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*மைத்திரிபாலவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அரசியலில் இன்று பெரும் எதிரெதிர் நிலையில் நிற்பவர்கள் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். கடந்த அமைச்சரவைக் கூட்டம் வரை கருத்து நிலையில் – விடயதானங்களில் – வெளிப்படையாகவே பிரதமருக்கு எதிரான நிலைப்பாட்டையே பல சமயங்களில், ஏன் பெரும்பாலும் எல்லா வேளைகளிலும், ஜனாதிபதி பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றமையை அவதானித்தோம்.*

*இதனால் தமது திட்டங்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் முன்நகர்த்த முடியாமல் திண்டாடுகின்றமையையும் கவனித்து வந்தோம். ஆனால் இன்று (செவ்வாய்க்கிழமை) நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நிலைமை தலைகீழாக இருந்தது. பிரதமருடன் எல்லா விடயங்களிலும் வலிந்து இணங்கிப் போகும் ஒரு நிலைப்பாட்டை ஜனாதிபதி கடைப்பிடித்தார். இது, எமக்கு ஆச்சரியமாக இருந்தது"* – என்ற சாரப்பட நேற்றுக் கருத்து வெளியிட்டார் அந்த மூத்த அமைச்சர்.

என்ன காரணமாக இருக்கும் என்று கேட்டேன்.

அவர் சொன்ன காரணம் வியப்பாக இருந்தது.

*"இன்றைய அரசியல் நிலைமையில் மூன்று வயதான அரசியல்வாதிகளுக்கு அரசியல் எதிர்காலம் இல்லை என்ற யதார்த்தம் உருவாகியிருக்கின்றது. ஒருவர் – மஹிந்த ராஜபக்ஷ, மற்றவர் – ரணில் விக்கிரமசிங்க, மூன்றாமவர் – மைத்திரிபால சிறிசேன.*

*"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைத் தொடர்ந்தால் இவர்களின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறி. இதனால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையையே அடியோடு ஒழித்தால் என்ன என்ற இணக்கப்பாட்டுக்கு திரைமறைவில் மூவரும் வந்துள்ளார்கள் என்று ஒரு பேச்சடிபடுகிறது."* – என்றார் அந்த அமைச்சர்.

சரி. அப்படி அவர்கள் முடிவு செய்தாலும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அவ்வாறு ஒரு மாற்றத்தைக் கொண்டு வருகின்றமை சாத்தியமா? அதற்கு வாய்ப்புகள் உண்டா? – என்று கேட்டேன்.

*"எனக்குத் தெரியவில்லை. அப்படிச் செய்வது என்றாலும் இந்த மூன்று தலைவர்களின் கீழும் உள்ள எம்.பிக்கள் – குறிப்பாக அடுத்த தலைமுறை எம்.பிக்கள் – இளம் அரசியல் தலைவர்கள் – அதற்கு இணங்குவார்களா என்பது தெரியவில்லை. இத்தகைய மாற்றம் அவர்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப்பது அல்லவா? அதில் தான் அவர்களின் எதிர்கால அரசியலும் தங்கியுள்ளது அல்லவா?"* – என்றார் அந்த அமைச்சர்.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரி – பிரதமர் ரணில் இடையே நிலவிய – வழக்கத்துக்கு மாறான – மிக அந்நியோன்னியம் மற்றும் புரிந்துணர்வு நிலைமையை வேறு ஓர் அரசியல் தரப்பும் அதிசயமான விடயமாக எனக்குச் சுட்டிக்காட்டியது.

சுதந்திரக் கட்சியினருடன் மிக நெருக்கமான தொடர்பு கொண்டுள்ள அந்த வட்டாரம் இந்தப் புதிய புரிந்துணர்வுக்கு வேறு காரணத்தைக் கூறியது.

*"இரண்டொரு நாள்களுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து சில விடயங்களை விளக்கினார். சுதந்திரக் கட்சியை அழித்தவர்களில் மிக முக்கியமான தரப்பினர் இரண்டு பிரிவினர் என்றும், ராஜபக்ஷக்களும் பிரேமதாஸாக்களுமே அவர்கள் என்றும், இந்த இரு தரப்பினருடனும் உடன்பட்டுப் போய் சுதந்திரக் கட்சியை மேலும் பலவீனமாக்கி விடவேண்டாம் என்றும் 'அட்வைஸ்' செய்திருக்கின்றார் சந்திரிகா. ஐக்கிய தேசியக் கட்சி உத்தியோகபூர்வமாகத் தெரிவு செய்யும் தரப்புடன் இணங்கிப் போங்கள் என்று குறிப்பிட்ட சந்திரிகா, அது குறித்துத் தாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேசுவார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கூறியிருக்கின்றார்.*

*அதற்குப் பின்னரே மைத்திரி – ரணில் புதிய புரிந்துணர்வு நிலைப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. இது எத்தனை நாளைக்கு நீடிக்கும் என்பது தெரியாது."* – என்றும் குறிப்பிட்டது அந்த வட்டாரம்.

கொழும்பில் ஏதேனும் பெரிய அதிரடி அரசியல் காய் நகர்த்தல்களை அடுத்து ஓரிரு தினங்களில் பார்க்கலாம் என்றும் அந்த வட்டாரம் மிக நம்பகரமாகத் தெரிவித்தது.

★ ★ ★

ஐக்கிய தேசிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் நேற்று சுமார் ஒரு மணி நேரம் கொழும்பில் நடைபெற்றது.

அமைச்சர்கள் ஹக்கீம், மனோ கணேசன், திகாம்பரம், சம்பிக்க ரணவக்க என்று ஐ.தே.கட்சியுடன் சேர்ந்து ஆட்சி அமைத்திருக்கும் கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் ரணிலைப் பிய்த்தெடுத்தனர் என்று தகவல்.

ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் புதிதாக அமைக்கப்படும் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை உடனடியாக – அடுத்த ஓரிரு நாள்களில் – அறிவிக்கும்படி இவர்கள் அனைவரும் ஒரேயடியாக வற்புறுத்தினர். இந்தத் தலைவர்கள் அனைவரும் ஐ.தே. கட்சிக்கு ஒரு புதிய 'பிராண்ட்' (ரகம்) தலைவர் வேண்டும் என்ற பெயரில் சஜித் பிரேமதாஸாவை ஆதரிப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் ரணிலோ வழமை போல – கல்லூளி மங்கன் போல – இந்தக் கோரிக்கைக்குத் தெளிவான பதிலேதும் தராமல் இழுத்தடித்தாராம்.

*"ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூடி அதனை முடிவு செய்யும். கட்சிக்குள் பேசிக் கொண்டிருக்கிறோம். விரைவில் அறிவிப்போம்"* – என்று கூறி, தெளிவான – திட்டவட்டமான – பதில் தராமல் நேற்றும் வழமை போல மழுப்பினாராம் ரணில்.

கூட்டுக் கட்சிகளின் நேற்றைய கூட்டத்திலும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மிஸ்ஸிங். அவரின் பரிபூரண ஆதரவு ரணில் பக்கம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இதற்கிடையில் ஐ.தே.கட்சிக்குள் சஜித் பிரேமதாஸாவுக்கு ஆதரவாக அளவுக்கு அதிகமாக குரல் எழுப்பி, பல்வேறு அறிக்கைகளை வெளியிட்ட அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களான அஜித் பெரேரா, சுஜீவ சேனசிங்க ஆகியோருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் வேலைகளைக் கட்சியின் தலைமை ஆரம்பித்திருக்கின்றமை சஜித் தரப்பை எதிர்பாராத பெரும் அதிர்ச்சிக்குள் ஆழ்த்தயிருப்பதாகத் தெரிகின்றது.

இரண்டு பேரினதும் அமைச்சுப் பதவிகள் கூடத் தற்காலிகமாகப் பிடுங்கப்பட வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த நடவடிக்கையால் சஜித் அணி பக்கம் திடீரென அதீத அமைதி ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

எது, எப்படியோ அடுத்து வரும் தினங்களும் வாரங்களும் இலங்கை அரசியலில் சூறாவளி அதிர்வுகளை ஏற்படுத்தும் என்பது மட்டும் நிச்சயம். இதை அரசியல் வானில் இப்போது கருக்கட்டி வரும் அதிரடி மேகங்கள் உறுதிப்படுத்துகின்றன என்பது மட்டும் உண்மை.

**- மின்னல் -**

# காடுகளை பாதுகாக்க வலியுறுத்தி கிளிநொச்சியில் நேற்றுப் பேரணி








கிளிநொச்சி, ஓக. 28

உலகின் நுரையீரல் என வர்ணிக்கப்படும் அமேசன் காடுகள் எரிவது தொடர்பில் பொது மக்களின் கவனத்துக்கு கொண்டு செல்வது பற்றியும் காடுகளைப் பாதுகாக்கவேண்டும் என வலியுறுத்தியும் விழிப்புணர்வுப் பேரணி ஒன்று நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி பரந்தன் விவசாயக் கல்லூரி மாணவர்களின் ஏற்பாட்டில் கிளிநொச்சி ஏ - 9 வீதி கரடிபோக்குச் சந்தியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி டிப்போச் சந்திவரை சென்றடைந்தது. பேரணியின்போது கலந்துகொண்டவர்களால் விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில் அமேசன் காடுகளில் 2.5 மில்லியன் பூச்சி இனங்களும், 10000 இற்கு அதிகமான தாவர வகைகளும், 20000 இற்கு அதிகமான பறவைகளும், முலையூட்டிகளும், 3000 இற்கு அதிகமான நன்னீர் மீன் இனங்களும், 350 சுதேச இனத்தைச் சேர்ந்த 30 மில் லியன் மக்களும் காட்டில் தங்கி வாழ்கின்றார்கள். அத்தோடு உலகுக்கு 20 வீதமான பிராணவாயுவை அமேசன் காடுகள் வழங்குகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## அனுரகுமாரவுக்கு ஆதரவளிக்க 16 தொழிற்சங்கங்கள் தீர்மானம்

மட்டக்களப்பு, ஓக. 28

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 16 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி.க்கு அதரவளிக்கவுள்ளன எனத் தெரிவித்துள்ளன.

அதற்கமைய கட்சியின் வேட்பாளரும் கட்சியின் தலைவருமான அநுர குமார திசாநாயக்கவுக்கு ஆதரவு தெரிவிக்கத் தீர்மானித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட விவசாயச் சங்கத் தலைவர் நடேசன் சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

மக்கள் சக்தியின் மட்டக்களப்பு தாமரைக்கேணியில் அமைந்துள்ள காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 71 வருடங்களாக எம்மை ஆட்சி செய்த நீலமும் பச்சையும் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் அதற்கு மாறாக இந்த நாட்டை அடகுவைத்து அழித்துவிட்டார்கள்.

எனவே, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விவசாயச் சங்கம், பொறியியலாளர் சங்கம், மண்அகழ்வு உத்தரவுப் பத்திரம் உள்ள சங்கம், கிழக்கிலங்கை இந்து வாலிப முன்னணி உட்பட 16 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து சிறுபான்மை இனத்திற்கு உதவி செய்யக்கூடிய ஜே.வி.பி.யின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கவுக்கு ஆதரவு தெரிவிக்கத் தீர்மானித்துள்ளோம் .

கிழக்கு வாழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தொழிலாளரை மேம்படுத்தும் எமது மக்கள் சக்திக்கு அணிதிரளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (ஐ)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பேர் படுகொலை

வென்னப்புவ பிரதேசத்தில் கூரிய ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டு பெண் ஒருவரும் அவரது சகோதரரும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

19 வயதுடைய யுவதியும் அவரது சகோதரரான 8 வயதுடைய சிறுவனுமே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளார்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)






# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## பேரினவாத பேரெழுச்சியை எதிர்கொள்ள நாம் தயாரா?

**"ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது"** என்பார்கள்.

வெற்று வாய்ச் சவடால் பேச்சு மேடைக்கு உதவும்; ஆனால் செயலுக்கு உதவாது. தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமை தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் வெளியிடும் கருத்துகளும் இப்படி வெற்று வாய்ச் சவடால் பேச்சாகவே இருக்கின்றன.

பயனுள்ள பல காரியங்கள் ஆற்ற வேண்டிய இந்தச் சமயத்தில் இப்படி வீணே – பொருத்தமற்று – மார் தட்டித் திரிவதில் அர்த்தமில்லை.

*"முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவைப் பார்த்து தமிழ் மக்கள் அஞ்சவில்லை. அவர் பத்துத் தலை இராவணன் போல வந்தாலும் அவரை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கிறோம்"* – என்று முழங்கியிருக்கின்றார் சிவாஜிலிங்கம்.

நல்லது. கோட்டாபய பத்துத் தலை இராவணனாக அல்லாமல், சாதாரண கோட்டாபயவாகவே வரட்டும். அவரை எதிர்கொள்ள சிவாஜிலிங்கம் உட்பட தமிழர்கள் ஆகிய நாம் வைத்திருக்கும் திட்டம் – உத்தி – தந்திரோபாயம் – யாது? பயனுறுதியுள்ள – கட்டுறுதியான திட்டம் ஒன்று தமிழர் தரப்பிடம் இருக்கின்றதா? அத்தகைய திட்டம் ஒன்றை தயாரிப்பதில் சிவாஜிலிங்கம் உட்பட நமது அரசியல்வாதிகள் கவனம் செலுத்தி இருக்கிறார்களா? குறைந்த பட்சம் கோட்டாபய என்ற சக்தி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற அரசியல் பேராயுத பலத்துடன் வந்தால் அதை எதிர்கொள்ள நாம் – தமிழர்கள் – ஒற்றுமையாக செயற்பட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது என்பதையாவது வாய்ச் சவடால் காட்டும் சிவாஜிலிங்கம் உட்பட நமது தமிழ் தலைமைகள் உணர்ந்திருக்கின்றனவா?

இதுதான் இன்று சிந்திக்கப்பட வேண்டிய முக்கிய விடயம்.

உலகே வியக்கும் கட்டமைப்பாக இருந்தது நமது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம். தமிழர்களின் சுதந்திர இயக்கமாகவும் தமிழரின் சுயநிர்ணயப் போராட்டத்துக்கான உயிர் மூச்சாகவும் ஒரு வலுமிக்கப் போராட்ட சக்தியாகவும் ஒரு கால கட்டத்தில் அது பரிணமித்தது.

ஓர் உறுதியான, கட்டுப்பாடு மிக்க தலைமை, ஒரு தெளிவான – நீதியான – அரசியல் இலட்சியம், நீண்ட கால பட்டறிவில் முதிர்ச்சி பெற்ற போராட்ட வரலாற்று அனுபவம், பரந்துபட்ட பொதுசனப் பலம், இவை அனைத்தையும் தாண்டி கட்டுக்கோப்பான – வீரம் செறிந்த – முப்படைகளின் கட்டமைப்பு, அதையும் தாண்டி தமிழர் தாயகத்தின் பெரும் பகுதியைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்து ஒரு நிழல் அரசாங்கத்தையே அது நிர்வகித்தும் வந்தது.

இவ்வாறு உலகை வியக்க வைத்த விடுதலைப் புலிகள் இயக்கமும் அதன் போராட்ட வலிமையும் குறுகிய காலத்தில் சிதறடிக்கப்பட்ட நிலையில் தமிழர் தாயகம் இன்று வீதிக்கு வந்து நிற்கின்றது.

அநீதியான, மனிதப் பண்பியல்புகளுக்கு ஒவ்வாத கொடூரப் போக்கில் தமிழர்களின் நீதி, நியாயமான ஆயுதப் போராட்டம் முறியடிக்கப்பட்டது என்பது உண்மைதான். சர்வதேச சமூகம் உட்பட பல தரப்புகள் செய்த சதி வலையில் அந்தப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டது என்பதும் வாஸ்தவம் தான்.

ஆனால், இதை எல்லாம் முன்னின்று நடத்திய சூத்திரதாரி கோட்டாபய ராஜபக்ஷதான் என்பதை நாம் மறந்து விடக் கூடாது; மறந்து விடவும் முடியாது.

2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஷவின் தகுதி, திறமைகளை உரைத்துப் பார்த்த விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம், அவருக்குப் பின்னால் நின்ற பௌத்த, சிங்களப் பேரினவாதியான கோட்டாபய ராஜபக்ஷவை உரைத்துப் பார்க்கத் தவறிவிட்டது என்றே கூறவேண்டும். அதன் விளைவைத்தான் முள்ளிவாய்க்கால் வரைப் பட்டுணர வேண்டிய கொடூரம் தமிழர் தரப்புக்கு ஏற்பட்டது.

அந்த வரலாற்றுத் தவறை நாம் இன்னொரு தடவை விடக்கூடாது.

தென்னிலங்கையில் பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாண்மை மீண்டும் கோட்டாபயவின் பெயரால் விஸ்வரூபம் எடுத்திருக்கும் பேராபத்து இப்போது நேர்ந்திருக்கின்றது.

அவரின் எழுச்சி சரியாக எதிர்கொள்ளப்படாவிட்டால் மிலேனியத்தின் முதல் ஒன்றரை தசாப்தத்தில் தமிழர்களுக்கு ஏற்பட்ட பேரழிவை விட மிக மோசமான நிலைமை இங்கு ஏற்படும். இலங்கைத் தீவில் தமிழினத்தின் இருப்பே கேள்விக்குறியாகும்.

இந்த ஆபத்தை எதிர்கொள்ள பயனுள்ள கூட்டு முயற்சியை தமிழர் தரப்பு இப்போதே ஆரம்பிக்க வேண்டும். தமக்குள் தீர்மைத்தனமான அரசியல் வேறுபாடுகளை புறமொதுக்கி வைத்து விட்டு, விஸ்வரூபம் எடுக்கும் பேரினவாத அரக்கனை எதிர்கொள்வதற்கு தமிழர்கள் ஐக்கியப்பட்டு, அரசியல் ரீதியில் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

அதற்கான வழிவகைகளை உள சுத்தியோடு ஆராய்வதை விடுத்து, இப்படி சிவாஜிலிங்கம் போன்றோர் வாய்ச் சவடால் பேச்சுப் பேசுவது அர்த்தமற்றது.

# ஐ.தே.கவில் இருந்து சிலர் பெரமுன பக்கம் பாய்வர்!

## கனக ஹேரத் எம்.பி. கூறுகிறார்



கொழும்பு, ஓக. 28

ஐக்கிய தேசியக் கட்சியின் சில முக்கியஸ்தர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொள்ளவுள்ளனர் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு விவகாரத்தினால் ஐக்கிய தேசியக் கட்சி பல பிரிவுகளாகப் பிளவடையும்.

இவ்வாறு கட்சி பிளவடையும் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சில முக்கியஸ்தர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொள்வார்கள்.

இது தொடர்பான பேச்சுகள் மிகவும் இரகசியமான முறையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பேச்சுகள் வெற்றியளித்தால் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியான பின்னர் அவர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்துகொள்வார்கள் – என்றார். (ஐ)

# நல்லூர்ச் சூழலில் யாசகம் பெற்ற 9 பேருக்கு தலா 20 ரூபா தண்டம்

## எச்சரிக்கையுடன் விடுவித்தது யாழ். நீதிமன்றம்

வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தந்து நல்லூர் ஆலயச் சூழலில் யாசகம் பெற்ற 9 பேருக்கு தலா 20 ரூபா தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம், பாத்திரங்கள் உள்ளிட்ட உடைமைகளை மீள வழங்குமாறும் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா நடைபெற்று வருகிறது.

நல்லூர் ஆலயச் சூழலில் யாசகம் கேட்டு அமர்ந்திருந்த 9 பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள்.

யாசகர்கள் 9 பேரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்படுத்தப்பட்டனர். அவர்களின் உடைமையில் இருந்த பணம், பாத்திரங்கள் மற்றும் ஆடைகளை சான்றுப்பொருள்களாகப் பொலிஸார் மன்றில் சமர்ப்பித்தனர்.

9 பேருக்கும் எதிராக யாசகம் பெற்றனர் என்ற குற்றச்சாட்டு பொலிஸாரால் முன்வைக்கப்பட்டது.

9 பேரும் யாசகம் பெற்றபோதே கைது செய்யப்பட்டனர். ஒவ்வொருவரும் பதுளை, ஹற்றன் என மலையகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் ஆலயத்தில் கூடும் அடியவர்களிடம் திருட்டில் ஈடுபடவே வந்துள்ளனர் என்று சந்தேகம் உள்ளது என்று பொலிஸார் கூறினர்.

9 பேரும் தம்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டனர்.

9 பேரையும் கடுமையாக எச்சரித்த நீதிவான் அந்தோனிசாமி பீற்றர் போல், ஒவ்வொரும் 20 ரூபாவை தண்டமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டார். அத்துடன், அவர்களது உடைமையிலிருந்து மீட்கப்பட்ட பணம் உள்ளிட்டவைகளை மீள வழங்குமாறும் நீதிவான் அறிவுறுத்தினார். (ஐ – 07)

# தொல்பொருள் திணைக்களத்தின் தொல்லைக்குக் கூட தீர்வு கொடுக்காதவர் எப்படி நிரந்தர தீர்வை தருவார்?

## டக்ளஸ் தேவானந்தா எம்.பி. கேள்வி

கொழும்பு, ஓக. 28

யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னரும் எமது மக்களுக்கு தொல்லை கொடுத்துவரும் ஒரு தரப்பாக தொல்பொருள் திணைக்களம் இருந்து வருகின்றது. அந்த தொல்பொருள் திணைக்களத்தை தன்வசம் வைத்துள்ள அமைச்சர் ஒருவர் ஜனாதிபதியாக தான்தான் வரவுள்ளார் என மக்களிடையே கூறி வருகின்றார்.

சாதாரண தொல்பொருள் திணைக்களத்தின் பிரச்சினைகளுக்கே தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வைப் பெற்றுத்தராத அவர் எவ்வாறு தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான தீர்வை பெற்றுத் தருவார் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கில் அதிகமான காணிகளைத் தொல்பொருள் திணைக்களம் தனக்குரியதென சூறையாடி வருகின்றது. இதனால் எமது மக்கள் தமது பூர்வீகமாக வாழ்ந்து வந்த பல இடங்களை இழந்து வருகின்றார்கள். இது தொடர்பில் நான் பல தடவை அந்த அமைச்சரிடம் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பிப் பதிலளிக்குமாறும் தீர்வு காணுமாறும் கோரியிருக்கின்றேன். ஆனால் இன்றுவரை அதற்கான பதிலையோ அன்றித் தீர்வையோ வழங்காது அவர் இருந்து வருகின்றார்.

ஆனால் அந்த அமைச்சரது கட்சிக்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முண்டுகொடுத்து வருகின்றது. இத்தகைய ஒருவர் எமது நாட்டுக்கு ஜனாதிபதியாக வந்தால் எவ்வாறு தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பெற்றுத்தருவார் என நம்ப முடியும்.

நாம் தேர்தலுக்காக எதனையும் கூறுவது கிடையாது. அன்றும் இன்றும் என்றும் தமிழ் மக்களின் தேவைப்பாடுகளை முன்வைத்தே எமது கருத்துக்களை வெளிப்படையாக தெரிவித்து வருகின்றோம். அரசுகளுடன் நாம் பேரம் பேசுவதை இரகசியமாக நடத்துவது கிடையாது. ஒளிவு மறைவுகள் எம்மிடம் கிடையா. அந்த வகையிலேயே இம்முறையும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் எதுவித ஒளிவு மறைவும் இன்றி எமது கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளோம் – என்றார். (ஐ – 07)

நாளை 29.08.2019 வியாழக்கிழமை

நட்சத்திரம்: ஆயில்யம் மு.ப 8.12 வரை
திதி : சதுர்த்தி மு.ப 7.10 வரை
இராகுகாலம் : 1.35 – 3.05
சுப நேரம் : 7.35 – 9.05

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்

# உள்நாட்டு விவகாரங்களில் அமெ. தலையிட முடியாது!

## சீறுகின்றார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, ஓக. 28
இராணுவத் தளபதி நியமனம் உள்ளிட்ட, இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்யும் உரிமை அமெரிக்காவுக்குக் கிடையாது எனப் பொதுஜன பெரமுனவின் முன்னாள் தலைவரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

இலங்கை குடியுரிமை கொண்டவராக, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான தகைமையைக் கொண்டுள்ளார்.



அமெரிக்கப் பதிவாளர் திணைக்களம் வெளியிட்டுள்ள, குடியுரிமை துறந்தவர்களின் பட்டியலில் கோட்டாபய ராஜபக்ஷவின் பெயர் இல்லை என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் படுகின்றன. அந்தப் பட்டியலில் இடம்பெற வேண்டியது கட்டாயமில்லை. அதனை அமெரிக்கத் தூதரகமே உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கைக் குடிமகனாக, கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக் கடவுச் சீட்டைப் பெற்றுள்ளார்.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் குறித்து கோட்டாபய மகிழ்ச்சியாக இல்லை. அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும், 21/4 தாக்குதல்கள் குறித்து புதிய விசாரணைகளை நடத்துவார் என்று கூறினார். (ஐ)

# மழையுடனான வானிலை இன்று முதல் அதிகரிக்கும்

கொழும்பு, ஓக. 28
நாட்டில் நிலவும் மழையுடனான வானிலை இன்று முதல் அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், மத்திய, சப்ரகமுவ, தென் மற்றும் வட மேல் மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் எனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பிற்பகல் 2 மணிக்கு பின்னர் இடியுடன் கூடிய மழை பெய்யும் என கூறப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, தென் மற்றும் மத்திய மாகாணங்களில் 50 மில்லிமீற்றர் வரை மழைவீழ்ச்சி பதிவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரை மற்றும் புத்தளம் முதல் மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 50 முதல் 60 கிலோ மீற்றர் வரை காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று



யாழ்ப்பாணம், ஓக.28
இலங்கை இளங் கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவத்தையொட்டி நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில்–

இன்று புதன்கிழமை மாலை 6.45 மணி முதல் 7.15 வரை குழு இசை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி உயர்தரப் பாடசாலை மாணவர்கள் வயலின் – அ.ஜெயராமன், மிருதங்கம் – ம.லோகேந்திரன், தபேலா – ச.ஜெனில்சங்கர்.

7.15 முதல் 8.15 வரை இசைக்கச்சேரி பாட்டு – என்.வி.எம்.நவரெத்தினம், உடன்பாடுபவர் – ந.பரந்தாமன், வயலின் – சு.கோபிதாஸ், மிருதங்கம் – கி.அனந்தகோபன், கெஞ்சிரா – மு.சுலக்சன், முகர்சிங் றி.மோகனதர்சன்.

# ஜனாதிபதித் தேர்தல் 2020 ஏப்ரல் மாதமா?

கொழும்பு, ஓக. 28
ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரையில் ஒத்திவைக்கப்படலாம் என்ற கருத்துக்கள் அரச தரப்பில் வெளியாகியுள்ளன.

தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் மீண்டும் நீதிமன்றத்திடம் விளக்கம் கோர நடவடிக்கை எடுத்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிலவேளை, ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் ஒரே நேரத்தில் நடைபெற வாய்ப்புக்கள் உள்ளன என்றும் அவர் கூறினார்.

தனது பதவிக் காலம் 19ஆம் திருத்தச் சட்டத்தின் படியா? அல்லது ஏற்கனவே இருந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரகாரமா? என்பது தொடர்பில் இதற்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியிருந்தார். 19 ஆவது திருத்தச் சட்டத்தின் முன்னர் ஜனாதிபதியின் பதவிக் காலம் 6 வருடங்கள் என கூறப்பட்டிருந்தது. 19 ஆவது திருத்தத்தில் அது 5 ஆக மாற்றப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் 19 ஆவது திருத்தச் சட்டம் அமுலாகும் என உயர் நீதிமன்றம் விளக்கம் அளித்திருந்தது. இதன்படி, ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 வருடங்கள் எனத் தீர்மானம் ஆகியது.

இருப்பினும், ஜனாதிபதியின் தெரிவு பழைய சட்டப்படியே இடம்பெற்றது என்பதனால், ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் இன்னும் சந்தேகம் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விசேட வீட்டுக்கடனுக்கு அனுமதி

கொழும்பு, ஓக. 28
இராணுவத்தினருக்கான வீட்டுக்கடன் முறை தொடர்பில் அமைச்சரவையில் விசேட அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையில் அவர் இதனைக் கூறினார்.

என்டபிரைசஸ் ஸ்ரீ லங்கா கடன்திட்டத்தின் ஊடாக, நாட்டுக்காக தியாகம் செய்த இராணுவத்தினருக்கு விசேட கடன் திட்டத்தின் கீழ் இந்த வீட்டுக்கடன் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இராணுவத்தினரின் வீட்டுப் பிரச்சினைக்கு இந்தத்திட்டத்தின் ஊடாக நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# ரணிலுக்கு ஆதரவு வழங்கமாட்டேன்

## ரத்னதேரர் அறிவிப்பு



கொழும்பு, ஓக. 28
ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக்கும் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் ஜனாதிபதித் தேர்தலில் தான் கூட்டுச் சேரப் போவதில்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் இதனைக் கூறியுள்ளார்.

தனது கருத்துக்கு அதிக இணக்கப்பாடு காட்டும் ஒருவருடன் கூட்டுச்சேரவுள்ளதாகவும், பொதுவேட்பாளர் ஒருவர் உருவாக்கப்பட வேண்டியுள்ளார் எனவும் தேரர் சுட்டிக்காட்டினார்.

எந்த ஜனாதிபதி வேட்பாளராக இருந்தாலும், கடந்த 21 தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பவராகவும், மட்டக்களப்பு தனியார் பல்கலைதொடர்பில் உரிய தீர்மானம் எடுப்பவராகவும் இருத்தல் வேண்டும் என எதிர்பார்ப்பதாகவும் தேரர் கூறினார். (ஐ)

# மக்களின் தெரிவு சஜித்

## கூறுகிறார் மனுஷ நாணயக்கார

கொழும்பு, ஓக. 28
வெற்றிபெறக்கூடிய ஜனாதிபதி வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸவை நாட்டு மக்கள் கோருகின்றனரெனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார, அவருடன் இணைந்து பிரதமர் உள்ளிட்ட அனைவரும் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என்றார்.



காலியில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – கட்சி என்ற வகையில் கூட்டமைப்பு ஒன்றை அமைத்து, அந்தக் கூட்டமைப்பின் ஊடாக ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை விரைவில் அறிவிக்கவேண்டும்.

நாட்டு மக்கள் தற்போது சஜித் பிரேமதாஸவை நிறுத்துமாறு கேட்கின்றனர். தனி ஒருவரால் அனைத்து வேலைத்திட்டங்களையும் முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. ஆகவே, அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும் – என்றார். (ஐ)

# சார்ள்ஸ் எம்.பி. – அமைச்சர் ரிஷாத் பொது நிகழ்வில் வாய்த்தர்க்கம்!

மன்னார், ஓக. 28
மன்னார், மறிச்சிக்கட்டி கமநல சேவை நிலைய திறப்பு விழாவில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

மன்னார், உயிலங்குளம் பகுதியில் கமநல சேவைகள் நிலைய கட்டடத்தை விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சர் ஹரிசன் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வு கமநல சேவைகள் நிலையத்தின் நிகழ்வாக இருந்தபோதும் நிகழ்வை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆதரவாளர்களே நடத்தியிருந்தனர். அமைச்சர் ரிஷாத் பதியுதீனை முன்னுரிமைப்படுத்தும் வகையில் ஏற்பாட்டாளர்கள் செயற்பட்டனர். மேடையில் மொழிபெயர்ப்பு செய்து அறிவிப்புச் செய்தவர் ஒன்றுக்கு பல தடவை தேசியத் தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் என அடிக்கடி விளித்துக் கொண்டார்.

இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், அமைச்சர் ஹரிசனிடம் நீங்கள் பிரதம அதிதி என்பதால் தான் நான் இந்த நிகழ்வுக்கு வருகை தந்தேன் எனக் கூறியுள்ளார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் ரிஷாத் பதியுதீன், நீங்கள் என்னைப் பற்றி எப்போதும் தவறாகப் பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். நாடாளுமன்றத்திலும் என்னைப் பற்றித் தவறானவற்றைக் கூறி வருகின்றீர்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த நீங்கள் என்னைப் பற்றி எப்படிப் பேசுவீர்கள்?

பழைய அரசியல்வாதிகள் எல்லாம் அமைதியாக இருக்கும் போது நேற்று வந்த நீங்கள் எப்படி என்னைப் பற்றிப் பேச முடியும். நான் யாருக்கும் பயப்படமாட்டேன். இனிமேல் நான் யார் என்பதை உங்களுக்குக் காட்டுகின்றேன் எனக் கடுமையாக எச்சரித்தார்.

உணவருந்தச் சென்ற வேளையிலும் இருவரும் முரண்பட்டனர். (ஐ)

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து சு.க. கூட்டத்தில் பேச்சில்லை

கொழும்பு, ஓக. 28
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பில் நாள் அறிவிப்போ, அதனுடன் தொடர்புடைய வேட்பு மனுத் தாக்கலோ இடம்பெறவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் இதுபற்றிப் பேசுவது பொருத்தமற்ற ஒன்று என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார் எனக் கட்சி வட்டாரங்கள் குறிப்பிட்டன.

இதேவேளை, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 68 ஆவது பொதுக் கூட்டம் தொடர்பில் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றதாகவும் அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கூறினார்.

# காஷ்மீர் விவகாரம்; 3 ஆம் தரப்புக்கு இடமில்லை

## டிரம்பிடம் திட்டவட்டமாக தெரிவித்தார் மோடி!




*பியாரிட்ஸ்,ஓக.28*

*காஷ்மீர் பிரச்சினையில் மூன்றாவது நாட்டின் சமரசத்துக்கு இடமில்லை என அமெரிக்க ஜனாதிபதி டிரம்பிடம் இந்தியப் பிரதமர் மோடி திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார்.*

*பிரான்ஸில் அதிபர் டிரம்பை மோடி சந்தித்து பேசினார். அப்போதே இந்தக் கருத்தை டிரம்பிடம் பிரதமர் மோடி திட்டவட்டமாகக் கூறினார்.*

காஷ்மீர் விவகாரத்தில் தலையிடுமாறு சர்வதேச நாடுகளிடமும், ஐ.நா. போன்ற அமைப்புகளிடமும் பாகிஸ்தான் பலமுறை கோரிக்கை விடுத்திருந்தது. ஆனால் காஷ்மீர் விவகாரம் இந்தியா – பாகிஸ்தான் இருநாட்டு பிரச்சினை என்பதால் மூன்றாவது தரப்பு இதில் தலையிட அனுமதிக்க முடியாது என இந்தியா திட்டவட்டமாக கூறி வருகிறது.

எனினும் கடந்த மாதம் அமெரிக்க பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், காஷ்மீர் விவகாரத்தில் சமரசம் செய்யுமாறு அமெரிக்க ஜனாதிபதி டிரம்பிடம் வேண்டுகோள் விடுத்தார் எனத் தெரிகிறது.

அதை ஏற்று காஷ்மீர் விவகாரத்தில் சமசரம் செய்ய தயார் என டிரம்பும் அறிவித்தார். ஆனால் இதை இந்தியா திட்டவட்டமாக நிராகரித்தது.

இந்தச் சூழலில்தான் காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு சமீபத்தில் ரத்து செய்தது. இதற்கு பாகிஸ்தான் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் இந்தியா–பாகிஸ்தான் இடையே கடும் முரண்பாடு ஏற்பட்டு உள்ளது. இந்த விவகாரத்தையும் சர்வதேச அரங்குக்கு பாகிஸ்தான் எடுத்துச் சென்றபோதும் உலக நாடுகளின் ஆதரவு அதற்குக் கிட்டவில்லை.

சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்ட நடவடிக்கை இந்தியாவின் உள்நாட்டு விவகாரம் எனவும், இதை பாகிஸ்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் கூறிய மத்திய அரசு இந்த விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இந்த நிலையில் பிரான்ஸின் பியாரிட்ஸ் நகரில் நடைபெற்ற ஜி–7 மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி ஞாயிறன்று அந்த நாட்டுக்குச் சென்றார். பின்னர் மாநாட்டுக்கு இடையே ஜி–7 நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து இருதரப்பு உறவுகள் பற்றி பேசினார்.

இதில் முக்கியமாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்பை சந்தித்து பேச்சு நடத்தினார். அப்போது காஷ்மீர் விவகாரம் குறித்து இரு தலைவர்களும் பேசினர். அப்போது பிரதமர் மோடி, 'காஷ்மீர் விவகாரம் இந்தியா–பாகிஸ்தான் இடையேயான பிரச்சினை. இதில் மூன்றாவது நாட்டின் சமரசத்துக்கு இடமில்லை' என டிரம்பிடம் திட்டவட்டமாக கூறினார்.

பின்னர் நேற்று முனதினம் மீண்டும் இரு தலைவர்களும் அதிகாரபூர்வமாகச் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேசினர்.

குறிப்பாக அமெரிக்காவில் இருந்து 400 கோடி டொலர் (இந்தியப் பணத்தில் சுமார் ரூ.28 ஆயிரம் கோடி) அளவுக்கு இந்தியா எண்ணெய் இறக்குமதி செய்து வரும் நிலையில், அதை அதிகரிப்பது குறித்து இரு தலைவர்களும் பேசினர். மேலும் பிரதமர் மோடி அடுத்த மாதம் (செப்ரெம்பர்) அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொள்வதற்கு முன், இருநாடுகளுக்கு இடையே நிலவும் வர்த்தகப் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர வர்த்தக அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சு நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

பின்னர் இருவரும் இணைந்து செய்தியாளர்களிடம் பேசினர். அப்போது காஷ்மீர் விவகாரம் குறித்தும், அதில் மூன்றாவது நாட்டின் தலையீடு குறித்தும் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பிரதமர் மோடி பதிலளித்தபோது கூறியதாவது:–

இந்தியா, பாகிஸ்தான் இடையே ஏராளமான இருதரப்பு பிரச்சினைகள் உள்ளன. இது இயற்கையானது தான். இதில் 3 ஆவது நாட்டை தொந்தரவு செய்ய நாங்கள் விரும்பவில்லை. இவற்றை நாங்களே விவாதித்து தீர்வுகாண எங்களால் முடியும். 1947 ஆம் ஆண்டுக்கு முன்னால் நாங்கள் ஒரே நாடாக இருந்தோமென்றால், எங்களுக்கு இடையேயான பிரச்சினைகளுக்கு தற்போதும் தீர்வுகாண எங்களால் முடியும் என நம்புகிறேன்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானை தொடர்பு கொண்டு நான் பேசினேன். அப்போது இந்தியாவும், பாகிஸ்தானும் வறுமை, எழுத்தறிவின்மை மற்றும் பெரிய பிரச்சினைகளுக்கு எதிராக போராட வேண்டிய தேவையுள்ளது எனவும், நமது வேறுபாடுகளை களைந்து இணைந்து செயல்பட வேண்டும் என்றும் தெரிவித்தேன். –இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

பின்னர் டிரம்ப் கூறும்போது, 'காஷ்மீர் குறித்து நாங்கள் நேற்று (நேற்று முன்தினம்) இரவு விரிவாகப் பேசினோம். அங்கு நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாக பிரதமர் மோடி உண்மையிலேயே நம்புகிறார். அவர்கள் (இந்தியா) பாகிஸ்தானுடன் பேசுகிறார்கள். இந்தியாவும்–பாகிஸ்தானும் இணைந்து காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என நான் நம்புகிறேன். அது மிகவும் நல்லதாக இருக்கும்' என்று தெரிவித்தார்.

காஷ்மீர் விவகாரத்தில் சமரசம் செய்ய விருப்பம் தெரிவித்திருந்த டிரம்ப், பிரதமர் மோடியுடனான பேச்சுக்குப் பின் அதில் இருந்து பின்வாங்கியமை மூலம் தற்போது இந்த விவகாரம் முடிவுக்கு வந்துள்ளது.

## பாகிஸ்தான் அதிபர் ஆரிபுக்கு டுவிட்டர் நிறுவனம் நோட்டீஸ்

### காஷ்மீர் குறித்து சர்ச்சைக்குரிய பதிவாம்



இஸ்லாமாபாத்,ஓக.28

காஷ்மீர் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பதிவிட்ட பாகிஸ்தான் அதிபருக்கு டுவிட்டர் நிறுவனம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ஜம்மு – காஷ்மீருக்கு அளிக்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு கடந்த 5 ஆம் திகதி ரத்துச் செய்தது. இதற்குப் பாகிஸ்தான் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. ஜம்மு காஷ்மீர் விவகாரம் இந்தியாவின் உள்விவகாரம் என்று இந்தியா திட்டவட்டமாக தெரிவித்து விட்டது. காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவுக்கு எதிராக சர்வதேச நாடுகளின் ஆதரவைப் பெற முயன்ற பாகிஸ்தானின் திட்டம் தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில், சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டதற்கு எதிராக காஷ்மீரில் போராட்டம் நடைபெறுவது போன்ற வீடியோவை, பாகிஸ்தான் அதிபர் ஆரிப் அல்வி தனது டுவிட்டர் பக்கத்தில் அண்மையில் பதிவிட்டிருந்தார்.

இந்தப் பதிவு அவதூறு பரப்பும் வகையில் உள்ளதாக அவருக்கு டுவிட்டர் நிறுவனம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்த நோட்டீஸை டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்த அந்நாட்டின் மனித உரிமைகள் அமைச்சர் சிரீன் மஸாரி, டுவிட்டர் நிறுவனத்தின் நோட்டீஸ் தவறான எடுத்துக்காட்டாகவும், கேலிக்குரியதாகவும் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.



## 30 ஆம் திகதி வரை சி.பி.ஐ. காவலில் வைத்து சிதம்பரத்தை விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

புதுடில்லி,ஓக.28

ஐ.என்.எக்ஸ். மீடியா முறைகேடு வழக்கில், இந்திய முன்னாள் நீதி அமைச்சர் ப.சிதம்பரத்துக்கு வருகிற 30 ஆம் திகதி வரை சி.பி.ஐ. காவலை நீடித்து டில்லி நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

ஐ.என்.எக்ஸ். மீடியா முறைகேடு தொடர்பாக சி.பி.ஐ. மற்றும் அமுலாக்கப் பிரிவு தொடர்ந்த வழக்கில் முன்னாள் மத்திய நிதிஅமைச்சர் ப.சிதம்பரத்தின் முன்ஜாமீன் மனுவை டில்லி உயர்நீதிமன்றம் கடந்த 20 ஆம் திகதி தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியது. இதற்கு எதிராக ப.சிதம்பரம் தரப்பில் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதற்கிடையே சி.பி.ஐ. அதிகாரிகள் ப.சிதம்பரத்தை அவருடைய டெல்லியில் உள்ள வீட்டில் இருந்து கைது செய்து சி.பி.ஐ. தனி நீதிமன்றில் 22 ஆம் திகதி ஆஜர்படுத்தினார்கள். தனி நீதிமன்றம் அவரை 5 நாள்கள் சி.பி.ஐ. காவலில் வைத்து விசாரிக்க உத்தரவிட்டது.

இதைத்தொடர்ந்து, சி.பி.ஐ. அதிகாரிகள் ப.சிதம்பரத்தை தங்கள் தலைமை அலுவலகத்தில் உள்ள விருந்தினர் இல்லத்தில் வைத்து, ஐ.என்.எக்ஸ். மீடியா முறைகேடு விவகாரத்தில் நடந்த பணபரிமாற்றம் தொடர்பாக அவரிடம் பல்வேறு கேள்விகளைக் கேட்டு விசாரணை நடத்தினார்கள்.

5 நாள் காவல் முடிவடைந்ததை தொடர்ந்து, சி.பி.ஐ. அதிகாரிகள் நேற்று முன்தினம் ப.சிதம்பரத்தை, டெல்லி ரவுஸ் நிழற்சாலை பகுதியில் உள்ள தனிநீதிமன்றில் நீதிபதி அஜய்குமார் குஹார் முன்னிலையில் ஆஜர்படுத்தினார்கள்.

விசாரணை தொடங்கியதும் கடந்த 4 நாள்களாக சி.பி.ஐ. மேற்கொண்ட விசாரணை குறித்து நீதிபதி கேள்வி எழுப்பினார்.

இவ்விடயத்தை ஒட்டி இருதரப்பின் நீண்ட வாதங்களையும் கேட்ட நீதிபதி, ப.சிதம்பரத்தை வருகிற 30 ஆம் திகதி வரை தொடர்ந்து சி.பி.ஐ. காவலில் வைத்து விசாரிக்க உத்தரவு பிறப்பித்தார்.

# உலகிலேயே அதிகம் சம்பளம் வாங்கும் நடிகை ஜோஹன்சன்



உலகிலேயே அதிக சம்பளம் வாங்கும் பட்டியலில் நடிகைஸ்கார்லெட் ஜோஹன்சன் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

அமெரிக்காவின் 'போர்ப்ஸ்' இதழ் ஆண்டு தோறும் உலக பணக்காரர்களின்பட்டியலைவெளியிட்டு வருகிறது. அத்துடன் உலக அளவில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களை தேர்ந்தெடுத்து பட்டியலிட்டு வருகிறது.

அந்த வகையில், அதிக சம்பளம் வாங்கும் நடிகைகளின் பட்டியலை தற்போது போர்ப்ஸ் இதழ் வெளியிட்டுஉள்ளது. இதில் பிரபல ஹொலிவுட் நடிகையான ஸ்கார்லெட் ஜோஹன்சன் முதல் இடத்தை பிடித்துள்ளார்.

சூப்பர் ஹீரோ கதாபாத்திரங்களை மையப்படுத்தி எடுக்கப்பட்ட 'அவெஞ்சர்ஸ்' படங்களில் நடித்து புகழ்பெற்ற ஸ்கார்லெட் ஜோஹன்சனின் தற்போதைய சம்பளம் இலங்கைப் பணத்தில் ரூபா ஆயிரம் கோடியாகும்.

இவருக்கு அடுத்தபடியாக, ஹொலிவுட் நடிகை சோபியா வெர்ஹரா இப்பட்டியலில் 2 ஆவது இடத்தில் உள்ளார். இவர் தற்போது ரூ.825 கோடி சம்பளம் வாங்குகிறார். அதே போல் ரூ.625 கோடி சம்பளத்துடன் ஹாலிவுட் நடிகை ரீசி வித்தர்ஸ்பூன் 3 ஆவது இடத்திலும், ரூ.610 கோடி சம்பளத்துடன் ஹொலிவுட் நடிகை நிக்கோலே கிட்மேன் 4 ஆவது இடத்திலும் உள்ளனர்.

# வர்த்தகப் போரை முடிக்க சீனா விருப்பம்

பீஜிங்,ஒக.28

வர்த்தகப்போர் நீடிப்பதை ஏற்கமுடியாது என்றும், அமெரிக்கா உடன் பேச தயாராக இருக்கிறோம் என்றும் சீனா தெரிவித்துள்ளது.

உலகின் இரு பெரும் பொருளாதார நாடுகளான சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே ஓர் ஆண்டுக்கும் மேலாக வர்த்தகப் போர் நீடிக்கிறது. வர்த்தக ஒப்பந்தம் எட்டப்படாத காரணத்தால், இருநாடுகளும் பரஸ்பரம் வரி விதித்து பதிலடி கொடுத்து வருகின்றன.

அண்மையில், சுமார் 90 லட்சம் கோடி ரூபா மதிப்பிலான சீனப் பொருட்கள் மீது அமெரிக்கா கூடுதலாக 5 சதவீத வரி விதித்தது. அதற்கு பதிலடியாக சுமார் 13 லட்சம் கோடி ரூபா மதிப்பிலான அமெரிக்கப் பொருள்களுக்கு சீனாவும் 5 சதவீதம் கூடுதல் வரி விதித்தது.

இந்த வர்த்தகப்போர் காரணமாக சீனா பெரும் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது. அந்நாட்டின் பண மதிப்பு கடந்த 11 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வீழ்ச்சி அடைந்துள்ளது.

இந்த நிலையில், தலைநகர் பீஜிங்கில் 'ஸ்மார்ட் சீனா' சர்வதேச கண்காட்சியை தொடங்கி வைத்து பேசிய அந்நாட்டின் துணை பிரதமர் லியூ ஹீ, வர்த்தகப்போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்காவுடன் பேச்சு நடத்த சீனா தயாராக இருப்பதாகக் கூறினார்.

# அமேசான் காட்டுத் தீயை கட்டுப்படுத்த ஜி 7 நாடுகளின் உதவி தேவையேயில்லை

## இப்படி அதிரடி அறிவிப்பு விடுத்துள்ளது பிரேசில்



பாரிஸ்,ஒக.28

அமேசான் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த ஜி 7 நாடுகளின் உதவி தேவையில்லை என பிரேசில் அறிவித்துள்ளது.

உலக அளவில் 20 சதவீத ஒக்சிஜனை வெளியிடுவதால், உலகின் நுரையீரல் என்று வர்ணிக்கப்படும் அமேசான் காடுகளின் பல்வேறு இடங்களில் கடந்த சில வாரங்களாக தீ பற்றி எரிந்துகொண்டிருக்கிறது.

எட்டு நாடுகளில் பரந்து விரிந்துள்ள அமேசான் காடுகளின் பெரும்பாலான பகுதிகள் பிரேசில் மற்றும் பொலிவியாவில்தான் உள்ளன. சர்வதேச அழுத்தத்தைத் தொடர்ந்து பிரேசில் அதிபர் போல்சனாரோ காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த இராணுவத்தை ஈடுபடுத்த உத்தரவிட்டார்.

இந்தமுயற்சியில் 44,000 ராணுவ வீரர்கள் ஈடுபட்டு இருக்கின்றனர் என பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளதுடன், ஏழு மாநிலங்களில் தீயை அணைக்க ஈடுபடுமாறு உத்தரவிடப்பட்டு உள்ளது என்று அதிகாரிகள் ஞாயிற்றுக் கிழமை தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் தண்ணீர் கொட்டுவதற்கு போர்விமானங்களும் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன.

இந்த நிலையில், அமேசான் காடுகளில் பற்றி எரியும் தீயை அணைக்க, உதவி வழங்க தயாராக இருப்பதாக ஜி 7 நாடுகள் அறிவித்தன. ஆனால், ஜி 7 நாடுகளின் உதவியை பிரேசில் நிராகரித்துள்ளது.

(உ)

# நடுவானில் விமானம் – ஹெலி நேருக்கு நேர் மோதி விபத்து!

## தொழில் அதிபர் குடும்பம் உள்பட 7 பேர் பலி

மாட்ரிட், ஒக.28

ஸ்பெயின் நாட்டில் நடுவானில் விமானம் மற்றும் ஹெலிக்கொப்டர் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் தொழில் அதிபர் மற்றும் அவரது குடும்பத்தினர் உள்பட 7 பேர் பலியாகினர்.

ஸ்பெயின் நாட்டின் கிழக்கு பகுதியில் மத்திய தரைக்கடல் அருகே அமைந்துள்ளது பலேரீக் தீவுகள். இங்குள்ள மிகப்பெரிய தீவான மஜோர்கா, புகழ்பெற்ற சுற்றுலாத்தலமாக விளங்குகிறது.

இங்கு கடற்கரையோர ஹோட்டல்கள், சுண்ணாம்பு மலைகள், குகைகள் மற்றும் பாரம்பரிய நினைவுச் சின்னங்கள் உள்ளிட்டவை நிறைந்து காணப்படுகின்றமையால் பல்வேறு நாடுகளில் இருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில் ஜேர்மனியைச்சேர்ந்த பிரபல தொழிலதிபரான ஆகஸ்ட் இன்செல்கம்மர் ஜூனியர், தனது 43 ஆவது பிறந்த நாளை குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் மஜோர்கா தீவுக்குச் சென்று கொண்டாட முடிவு செய்தார்.

அதன்படி அவர் ஞாயிறன்று ஜேர்மனியைச் சேர்ந்த தனியார் நிறுவனத்துக்கு சொந்தமான ஹெலிக்கொப்டரில் தனது மனைவி



கிறிஸ்டினா மற்றும் குழந்தைகள் மேக்ஸ் (11), சோபி (9) ஆகியோருடன் மஜோர்கா தீவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

ஹெலிக்கொப்டரை இத்தாலியை சேர்ந்த விமானி செட்ரிக் லியோனி என்பவர் இயக்கினார். இந்த ஹெலிக்கொப்டர் மஜோர்கா தீவில் உள்ள கடற்கரை நகரமான இன்காவில் ஒரு மருத்துவமனைக்கு மேலே நடுவானில் பறந்து கொண்டிருந்தது.

அப்போது, 2 பேர் மட்டுமே அமரக்கூடிய இலகுரக சிறிய விமானம் ஒன்று ஹெலிக்கொப்டருக்கு எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்தது.

சற்றும் எதிர்பாராத வகையில் கண் இமைக்கும் நேரத்தில் ஹெலிக்கொப்டர் மற்றும் விமானம் ஒன்றோடு ஒன்று நேருக்கு



நேர் மோதிக்கொண்டன.

இதில் நிலைதடுமாறிய ஹெலிக்கொப்டர் அங்கு குடியிருப்பு பகுதியை ஒட்டியுள்ள தோட்டத்தில் விழுந்தது. அதே போல் விபத்துக்குள்ளான சிறிய ரக விமானம் அங்குள்ள சிறிய மண் சாலையில் விழுந்தது.

தரையில் விழுந்த வேகத்தில் ஹெலிக்கொப்டர் மற்றும் விமானத்தில் தீப்பிடித்தது. இதில் இரண்டும் முழுவதுமாக எரிந்து உருக்குலைந்துபோயின.

இந்த கோர விபத்தில் ஹெலிக்கொப்டரில் பயணம் செய்த ஆகஸ்ட் இன்செல்கம்மர் ஜூனியர், அவரது குடும்பத்தினர் மற்றும் விமானி செட்ரிக் லியோனி ஆகிய 5 பேரும் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிர் இழந்தனர். அதேபோல் சிறிய விமானத்தில் இருந்த ஸ்பெயின் நாட்டை சேர்ந்த விமானி ஜுவான் ஜோஸ் விடல் மற்றும் அவரது நண்பர் குஸ்டாவோ செரானோ ஆகிய இருவரும் பரிதாபமாக இறந்தனர்.

விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவில்லை. இது குறித்து விரிவான விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ள பலேரீக் பிராந்திய அரசு, அங்கு 3 நாள்களுக்கு துக்கம் அனுசரிக்கப்படும் எனவும் அறிவித்துள்ளது. இதற்கிடையில் விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கு அந்நாட்டின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

# பருவநிலை ஆலோசனை கூட்டத்தை புறக்கணித்தார் அமெரிக்க ஜனாதிபதி



பாரிஸ்,ஒக.28

ஜி-7 மாநாட்டில் பருவநிலை ஆலோசனை கூட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் புறக்கணித்தார்.

பிரான்ஸ் நாட்டில் நடந்த ஜி-7 மாநாட்டின் ஓர் அங்கமாக, பருவநிலை, பல்லுயிர் பெருக்கம், பெருங்கடல் ஆகியவை குறித்த ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் பங்கேற்பதாக இருந்தது.

ஆனால், காலை நிகழ்ச்சிகளையே டிரம்ப் தாமதமாக தொடங்கினார். ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்கலுடனான அவரது சந்திப்பு, 2 மணி நேரம் தாமதமானது. பின்னர், பிரதமர் மோடியை அவர் சந்தித்தார்.

அப்போது, பருவ நிலை தொடர்பான கூட்டத்தில் பங்கேற்பது பற்றி அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கு டிரம்ப், எனது அடுத்த நிகழ்ச்சி அதுதான். சுத்தமான காற்றும், சுத்தமான குடிதண்ணீரும் கிடைப்பதையே நான் விரும்புகிறேன் என்று கூறினார்.

ஆனால், சொன்னபடி, டிரம்ப் அந்த கூட்டத்தில் பங்கேற்கவில்லை. சிறிது நேரம் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்பட்டபோது, டிரம்பின் இருக்கை காலியாக இருப்பதைக் கண்டனர். இருப்பினும், மாநாட்டை நடத்திய பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் திறம்பட சமாளித்தார். டிரம்புக்கு பதிலாக, அவருடைய பிரதிநிதி கலந்து கொண்டார் என அவர் கூறினார்.

ஜேர்மன், இந்தியப் பிரதமர்களைச் சந்திக்கும் நிகழ்ச்சிகள் இருந்தமையால், அந்தக் கூட்டத்தில் டிரம்ப் பங்கேற்கவில்லை என்று அமெரிக்காவில் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் விளக்கம் அளித்தார்.

2015 ஆம் ஆண்டு பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகும் என்ற முடிவு எடுத்தவர் டிரம்ப் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால், மாசு வெளியேற்றத்தை கட்டுப்படுத்தும் உலக நாடுகளின் முயற்சி பாதிக்கப்பட்டது.



## ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி.

# ஐ.தே.க., கோட்டா எந்தத் தரப்புக்கு சாதகம், பாதகம்?

ஜனாதிபதி தேர்தலில் மூன்றாவது போட்டியாளரும் களத்தில் குதித்து விட்டார். கடந்த வாரம் காலிமுகத்திடலில் ஜே.வி.பி. கூட்டிய கூட்டம் பிரமாண்டமானது. இரண்டு பெரிய கட்சிகளுக்கும் செய்திகளை உணர்த்துவது. கூட்டத்துக்கு வந்த எல்லாருமே வாக்களிப்பார்களா? என்ற கேள்வி இங்கு முக்கியம். ஆனாலும் இரண்டு பெரிய கட்சிகளும் வழமையாக கூட்டத்திற்கு ஆள்களை திரட்டும் பொழுது கைக்கொள்ளும் கேவலமான உத்திகளை ஜே.வி.பி. கைக்கொள்வதில்லை என்று கூறப்படுகிறது.

காசு கொடுத்து, குடிக்கச் சாராயம் கொடுத்து அவர்கள் கூட்டத்துக்கு ஆள்களைத் திரட்டவில்லை என்றும் கூறப்படுகிறது. எனவே இந்த கூட்டம் அக்கட்சியின் கீழ்மட்ட வலைப்பின்னல் ஊடாக திரட்டப்பட்டது என்று கருதப்படுகிறது.

அனுரகுமார திசாநாயக்க அண்மைக் காலங்களில் இலங்கைத்தீவில் துருத்திக் கொண்டு மேலெழுந்த ஓர் அரசியல்வாதி ஆகும். மைத்திரிபால சிறிசேன ஏற்படுத்திய ஆட்சி குழப்பத்தின்போது அனுரகுமார திசநாயக்க நாட்டின் ஜனநாயக கட்டமைப்பை பாதுகாப்பதற்காக சரியான முடிவுகளை எடுத்தார் என்று கருதப்படுகிறது.

நாட்டின் ஜனநாயக கட்டமைப்பை பாதுகாப் பதற்கு கடந்த ஒக்ரோபர் மாதம் அவர் எடுத்த முடிவு மட்டும் போதாது. அதைவிட ஆழமான பொருள் இனப்பிரச்சினை தொடர்பில் அவர் என்ன முடிவை எடுக்கிறார் என்பதில்தான் நாட்டின் ஜனநாயக கட்டமைப்பை அவர் பாதுகாத்தாரா இல்லையா என்பதைப் பற்றிக் கூற முடியும்.

எனினும் இரண்டு பெரிய கட்சிகளும் ஆட்சி குழப்பத்தால் தளம்பிக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் அனுரகுமார திசாநாயக்க ஒரு தீர்மானிக்கும் சக்தி போல தோன்றினார்.

இப்பொழுதும் அவர் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக மேலெழுவாரா? – அவருடைய பிரவேசம் யாரை அதிகம் பாதிக்கும்? அல்லது யாரை பலப் படுத்தும்?

கோட்டாபயவின் வாக்கு வங்கி எனப்படுவது ஏனைய வேட்பாளர்களோடு ஒப்பிடுகையில் அதிகம் ஸ்திரமானது. அந்த வாக்கு வங்கியில் உடைவை ஏற்படுத்த அனுரகுமாரவால் முடியுமா?

ஏனெனில் 2009இல் பெற்ற யுத்த வெற்றி யோடு இனவாதத்துக்கு மஹிந்தவை தவிர வேறு யாரும் தலைமை தாங்க முடியாது என்ற நிலைமை கடந்த 10 ஆண்டுகளாக நிலவி வருகிறது. யுத்த வெற்றி வாதத்துக்கு எதிராக அதைவிடப் பெரிய தீவிரமான இனவாத நிலைப்பாட்டை எடுக்க வேறு எந்தக் கட்சியாலும் முடியாது.

எனவே ஒன்றில் ராஜபக்ஷ அணியோடு இணைய வேண்டும். இல்லையென்றால் தனித்துச் சென்று சற்று நடுவே நிற்கும் மூன்றாவது வழி ஒன்றை தெரிந்தெடுக்க வேண்டும். அனுரகுமார அப்படி ஒரு வழியைத்தான் தெரிந்தெடுத்து இருக்கிறாரா?

காலிமுகத்திடலில் அவர் ஆற்றிய உரையில் அபிவிருத்தியை பற்றி பேசுகிறார். ஊழலற்ற ஆட்சியை பற்றி பேசுகிறார். ஆனால் இனப்பிரச்சினை என்ற ஒன்றைப் பற்றி பேசவே இல்லை. அதாவது இனப்பிரச்சினைக்கு அவரிடம் தீர்வு இல்லை. அல்லது அபிவிருத்திதான் தீர்வு அல்லது வர்க்கப் புரட்சி தான் தீர்வு?

அவருடைய காலிமுகத்திடல் உரையைப் பொறுத்தவரை அபிவிருத்தியைத்தான் அவர் தீர்வாக முன்வைப்பது தெரிகிறது. ஆயின் கோட்டாபயவுக்கும் அவர்களுக்கும் இடையே வேறுபாடு என்ன?

'இந்த நாடு சந்தேகத்திற்கு இடமின்றி உலகின் குப்பைக் கோட்டையாக மாறியுள்ளது. எமது எதிர்கால குழந்தைகளுக்கு விஷம் இல்லாத ஒரு பழத்தையும் விஷம் இல்லாத ஒரு சொட்டு நீரையும் புதிய காற்றின் சுவாசத்தையும் கொடுப்பதற்காகவே நாங்கள் இந்த அரசியல் போராட்டத்தை நடத்துகின்றோம்' என்று அனுரகுமார கூறுகிறார்.

ஆனால் விஷமில்லாத பழத்தையும் விஷமில்லாத சொட்டு நீரையும் வழங்குவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளிக்கும் அவர் விஷமில்லாத அரசியல் குறித்து ஏன் வாக்குறுதி அளிக்கத் தவறினார்? – அவருக்குள் இருக்கும் விஷத்தை அவரால் நீக்க முடியவில்லையா?

இலங்கை தீவின் விஷம் எனப்படுவது இனவாதம் தான். இச்சிறிய தீவைக் கட்டி எழுப்பியது மூன்று இனங்களும்தான் என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள மறுப்பதுதான் விஷம்.

இம்மூன்று இனங்களையும் இத்தீவைக் கட்டி எழுப்பிய சக நிர்மாணிகளாக ஏற்றுக்கொண்டு ஓர் அரசியல் தீர்வை முன்மொழிய ஏன் ஜே.வி. பி.யால் முடியவில்லை? ரணில் மைத்திரி கூட்டு அரசாங்கத்தின் கீழ் உருவாக்கப்பட்ட யாப்பு உருவாக்கக் குழுவிற்கு ஜே.வி.பி. வழங்கிய பரிந்துரையில், ஆளுநரின் அதிகாரத்தை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டிருந்தது. இது தொடர்பில் தமிழ் மக்களுக்கு அனுர கூறும் பதில் என்ன?




வடக்கு,கிழக்கு இணைப்புக்கு எதிராகவும் சுனாமிப் பொதுக் கட்டமைப்புக்கு எதிராகவும் வழக்கு தொடுத்த ஒரு கட்சியே ஜே.வி.பி. தமிழ் மக்களின் தாயகக் கோட்பாடு தொடர்பில் ஜே.வி.பி.யின் நிலைப்பாடு என்ன?

## தமிழ் மக்கள் தீர்மானிக்கும் சக்தியாக மீண்டும் உலகுக்கு உணர்த்த விருப்பத் தெரிவு வாக்கை பாவிக்கலாம்!

இலங்கைத்தீவில் இனப்பிரச்சினைக்கு பொருத்தமான ஒரு தீர்வை முன்வைக்காதவர் நாட்டின் இறைமையை பாதுகாக்க முடியாது. கோட்டாபய கூறுவதுபோல வெளிநாடுகள் தலையிடுவதை தடுப்பதற்கும் அவர்களால் முடியாது. ஏனெனில் இனப்பிரச்சினை என்ற ஒன்று உள்ளவரை இச்சிறியதீவில் வெளிச்சக்திகள் தலையிட்டுக்கொண்டே இருக்கும்.

எனவே ஜே.வி.பி. முதலில் இனப்பிரச்சி னைக்கான தீர்வை முன்வைக்க வேண்டும். காலிமுகத்திடலில் அனுரகுமார பேசும் போது இனப்பிரச்சினை தொடர்பாக எதையுமே தெளிவாகவும் திட்டவட்டமாகவும் குறிப்பிடவில்லை.

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன்வைக் காத எந்த ஒரு தென்னிலங்கை கட்சியும் மாற்றத்திற்கான ஒரு புதிய அரசியலை முன்னெடுக்க முடியாது. எனவே ஜே.வி.பி. முன்னெடுக்கும் அரசிய லில் புதிய உள்ளடக்கம் எதுவும் இல்லை. இரண்டு பெரிய கட்சிகளையும் விட ஜே.வி.பி. புதிதாக எதையும் கூறிவிடவில்லை.

யுத்த வெற்றிக்குப் பின் ராஜபக்ஷ அணியை மேவிக் கொண்டு இனவாதத்துக்கு தலைமை தாங்க ஜே.வி.பி. ஆல் முடியாது. அதனால் ரணி லுக்கும் ராஜபக்ஷவுக்கும் இடையே ஒரு வழியை அவர்கள் கண்டு பிடிக்கப் பார்க்கிறார்கள். ஆனால் அதில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் எதுவும் இருப்பதாக தெரியவில்லை. மாறாக மூன்றாவது அணியாக ஜே.வி.பி. போட்டியிடுவதன் மூலம் இரண்டு பெரிய கட்சிகளினதும் வெற்றி வாய்ப் புகளை சவால்களுக்கு உள்ளாக்கலாம்.

இது ராஜபக்ஷக்களை ஒப்பீட்டளவில் அதிகம் பாதிக்காது. ஏனெனில் அவர்கள் மிகத் தெளிவாக சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்திற்கு தலைமை தாங்குகிறார்கள். ஆனால் அனுரகு மாரவின் பிரவேசம் ஐக்கிய தேசியக் கட்சியை பாதிக்கும். ஏனெனில் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியைத் தீர்மானித்த வாக்குகளில் ஜே.வி.பி.யின் ஆதரவு வாக்குகளுக்கும் ஒரு பங்கு உண்டு.

இம்முறை அனுரகுமார தனியாகக் கேட்பதால் அந்த வாக்குகள் மஹிந்தவுக்கு எதிரான அணிக்குப் போகாது. எனவே அனுர குமாரவின் பிரவேசம் ரணில் அணியைத்தான் பாதிக்கும்.

அதேசமயம் அனுரகுமாரவும் வெற்றி பெறப் போவதில்லை. ஏனெனில் ஜே.வி.பியின் வழமையான வாக்கு வங்கியின்படி 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை அவர்களால் பெறமுடியாது. அவர்கள் மட்டுமல்ல இரண்டு பெரிய கட்சிகளும் கூட ஏனைய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்துதான் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறலாம் என்ற நிலைமையே கடந்த தேர்தலின் போது காணப்பட்டது.

எனவே ஜே.வி.பி. இம்முறை வெற்றியை நோக்கிப் போட்டியிடவில்லை. மாறாக இரண்டு பெரிய கட்சிகளையும் குழப்பும் நோக்கத்திலேயே போட்டியிடுகிறது. இதன்மூலம் எதிர்காலத்தில் தமது கட்சியை மேலும் பலப்படுத்த முடியுமா என்று அவர்கள் சிந்திக்கக் கூடும். ஆனால் இரண்டு பெரிய கட்சிகளையும் அவர்கள் குழப்பினால் இதில் அதிகமாக குழம்பப் போவது மஹிந்தவுக்கு எதிரான அணியின் வாக்கு வங்கிதான்.

16.08.2019 அன்று ஜேவிபியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கட்சியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா பின்வருமாறு கூறியிருந்தார்: மஹிந்த ராஜபக்ஷவின் முகாமை பிரதிநிதித்துவம் செய்யும் வேட்பாளரை கட்டாயம் தோற்கடித்தாக வேண்டும். அது கோட்டாபய மீது இருக்கும் பயத்தினால் அல்ல.

மஹிந்த ராஜபக்ஷ அணியில் கேடுகெட்ட துஷ்டத்தனமான அரசியல் கலாசாரம் இருக்கிறது என்பதை நாங்கள் தொடர்ச்சியாக கண்டுள்ளோம். அவர்களின் பின்னால் இருப்பவர்கள், படுமோசமான மோசடிக்கார்களாகும், அவர்களால், இனவாதத்தையும் இனவெறியையும் தூண்டுகின்ற, மதவாதத்தை தூண்டுகின்ற, ஊழல் மோசடிகளுக்கு எதுவிதமான வெட்கமோ பயமோ, சூடு சொறணையோ இல்லாத, சட்டத்திற்கு புறம்பாக செயற்பட முயற்சிக்கின்ற, அரசியல் தாற்பரியங்களை புறக்கணிக்கின்ற, நமது நாட்டின் சகலவித மான குற்றாசாட்டுகளுக்கும் பொறுப்பானவர்கள் தான் ராஜபக்ஷவை சூழ்ந்துள்ளனர்.

அதனால் அந்த அரசியல் கலாசாரத்தை பின்னணியாகக் கொண்ட இவர்களை தோற் கடித்தாக வேண்டுமென நாங்கள் திடமாக நம்புகின் றோம்' என்று.ஆனால் நடைமுறையில் மூன்றாவது தரப்பாக ஜே.வி.பி களமிறங்கியிருப்பது மஹிந்தவுக்கு எதிரான அணியைத்தான் ஒப்பீட்டளவில் அதிகம் பாதிக்கப் போகிறது. தான் வெல்லப் போவதில்லை என்பதை நன்கு தெரிந்திருந்தும் இரண்டு பெரிய கட்சிகளினதும் வெற்றி வாய்ப்புகளை குழப்பும் விதத்தில் ஜே.வி.பி. களமிறங்கியிருக்கிறது.

ஜே.வி.பி. இவ்வாறு இரண்டு பிரதான கட்சிகளினதும் வாக்குகளை உடைப்பது போல தமிழ் தரப்பும் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்து வதன் மூலம் இரண்டு பெரிய கட்சிகளையும் குழப்பினால் என்ன? அப்போது வேட்பாளர் வெற்றி பெறப்போவதில்லை. அதேசமயம் இரண்டு பிரதான வேட்பாளர்களும் பெறக்கூடிய வெற்றியை அவர் தீர்மானிக்கக் கூடும்.

அதன் மூலம் தமிழ் மக்களே இலங்கைத்தீவில் தீர்மானிக்கும் சக்தி என்பதனை மீண்டும் ஒரு முறை உலகத்துக்கு உணர்த்தலாம். மேலும் இரண்டாவது விருப்பத் தெரிவு வாக்கினை பிரதான வேட்பாளர்களில் யாராவது ஒருவருக்கு அளிப்பதன் மூலம் அவருடைய வெற்றியை தமிழ் மக்களே தீர்மானிக்கலாம். இது போன்ற ஒரு தேர்தல் வியூகத்தை வகுப்பதற்கு தமிழ் தலைவர்கள் தயாரா?

**நன்றி -ஆதவன்**

# வடக்கில் முகாம்கள் அகற்றப்படமாட்டா!

## பதவிக்கு வந்த கையோடு சவேந்திர சில்வா அதிரடி

கொழும்பு, ஓக. 28
வடக்கு – கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டா. இப்போது வரை முகாம்களை அகற்றும் எந்தத் தேவையும் வர வில்லை என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா, தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ள பாதுகாப்புக் கருத்தரங்கு குறித்து நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் தெரிவிக்கையில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இராணுவத் தளபதியாக எனது நியமனம் குறித்து சர்வதேச நாடுகளின் கருத்துக்களைக் கவனத்தில் கொள்ளவில்லை. அதேபோல் வடக்கின் அரசியல்வாதிகள் என்னைப் பற்றி முன்வைக்கும் கருத்துக்கள் அவர்களின் தனிப்பட்ட அரசியல் நிலைப்பாடாகும். அது குறித்து என்னால் எந்தக் கருத்துக்களையும் முன்வைக்க முடியாது.

நான் ஓர் இனத்துக்கு மட்டுமே இராணுவத் தளபதி அல்ல. இந்த நாட்டின் சிங்கள மக்களைப் போல தமிழர், முஸ்லிம்கள் என அனை



வரும் வாழ்கின்றனர். அவர்கள் அனைவரும் இலங்கை மக்கள். நான் இந்த நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளேன். எனது கடமையும் அதுவேயாகும்.

அத்துடன் நான் மாத்தளையில் பிறந்து வளர்ந்தவன். அங்கு சிங்கள மக்கள் மட்டுமல்ல, மூவின மக்களும் வசிக்கின்றனர். நான் அவர்களுடன் வளர்ந்த காரணத்தினால் எனக்கு அனைத்து மக்களின் மனங்களையும் அறிந்து கொள்ள முடியும். நான் தமிழ் மக்களின் பாதுகாப்பையும் கட்டாய கடமையாகக் கருதியே செயற்படுகின்றேன்.

என்மீதான போர்க் குற்றச்சாட்டு என்பது நிரூபணமாகாத கூற்றுக்கள் என்றே நினைக்கின்றேன். போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து எந்த ஆதாரங்களும் இல்லை. மன்னார் மனிதப் புதைகுழியையும் போர்க் குற்றம் என்றே கூறினார்கள்.

ஆனால் ஆய்வுகளின் பின்னர் அது வேறு ஒரு காரணி என்பது உறுதியாகியது. அதேபோல் தான் இந்த போர்க்குற்றச்சாட்டுக்களும் மாற்று வடிவம் பெறலாம் – என்றார்.

## வவுனியா மோதல்களில் ஐந்து பேர் காயமுற்றனர்

வவுனியா, ஓக.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் கைகலப்புகளில் காயமடைந்த பெண் உட்பட 5 பேர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை இந்த மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனப் பொலிஸாரிடம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

வவுனியா கூமாங்குளம், நெளுக்குளம், தோணிக்கல், ஈரப்பெரியகுளம், மெனிக்பாம் ஆகிய பகுதிகளில் உள்ள சில குழுக்கள் மற்றும் சில நபர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாகவே பெண் உட்பட 5 பேர் காயமடைந்துள்ளனர்.

தோணிக்கல் பகுதியில், இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய பெண் ஒருவர் தனது காணியில் குடியேற நடவடிக்கைகள் மேற்கொண்டபோது அருகில் வசித்தவர்களினால் காணிப் பிரச்சினை தொடர்பில் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் வவுனியா, செட்டிகுளம், ஈரப்பெரியகுளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## யாழ் புத்தகத் திருவிழா நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 28

வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் எண்ணக்கருவிற்கு அமைய இலங்கை புத்தக விற்பனையாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் 'யாழ் புத்தகத் திருவிழா 2019' நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.






யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் இந்தப் புத்தக திருவிழா



நிகழ்வை யாழ். மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆனல்ட் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்

யாழில் முதன்முறையாக மிகப்பிரமாண்டமாய் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தப் புத்தகக்கண்காட்சியானது எதிர்வரும் செப்ரெம்பர் 1ஆம் திகதி வரை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

30 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்தப் புத்தக கண்காட்சி மண்டபத்தின் ஒவ்வொரு பிரிவிலும் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், சிறுவர் கதைகள் , வழிகாட்டி நூல்கள், ஈழத்துப் படைப்புக்கள் உள்ளிட்ட உள்ளூர் மற்றும் இந்திய மூத்த எழுத்தாளர்களின் புத்தகங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் ஆரம்ப நிகழ்வில் யாழ் ஆயர், வடக்கு மாகாண அரச அதிகாரிகள் , புத்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள், இராணுவ அதிகாரி, பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(ஐ – 07)

## பாதுகாவலர் துணையுடன் வாழும் சிறுவரை தேசிய பாடசாலையில் சேர்க்க வலியுறுத்து

கொழும்பு, ஓக. 28

சிறுவர் இல்லங்களின் பாதுகாப்பிலுள்ள சிறுவர்களை அருகிலிருக்கும் சிறுவர் இல்லங்களில் சேர்க்குமாறு கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சிறப்பு அறிக்கை ஒன்றை கல்வி அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

அதில், ' சிறுவர் இல்லங்கள் மற்றும் பாதுகாவலர்களின் பாதுகாப்பிலுள்ள அனைத்துச் சிறுவர்களையும் அருகிலுள்ள தேசியப் பாடசாலையில் சேர்த்துக்கொள்ள முடியும்.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் ஆலோசனையில் ஜூலை 31ஆம் திகதி வெளியிட்ட 38/2019 சுற்றறிக்கைக்கு அமைவாக சிறுவர் இல்லங்களில் மற்றும் பாதுகாவலர்களின் பாதுகாப்பிலுள்ள சிறுவர்கள் அனைவரையும் தேசியப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதற்கு அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தேசியப் பாடசாலை அதிபர் ஒருவர், பாதுகாவலரின் பாதுகாப்பில் உள்ள மாணவனுக்கு அனுமதி வழங்க மறுத்து ஏற்பட்ட குழப்பநிலையை அடுத்த இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்று கல்வி அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரூ.8,400 கோடி டொலர் நிதி கைநழுவிப் போகிறது!

கொழும்பு, ஓக. 28

அமெரிக்காவினால் இலங்கைக்கு வழங்கப்படவிருந்த மில்லேனியம் சவால் உதவி திட்டத்தின் கீழான ரூ.8, 400 கோடி டொலர்கள் நிதி கைநழுவிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் போக்குவரத்து அபிவிருத்திக்காகவே இந்த உதவித்திட்டத்தை அமெரிக்கா இலங்கைக்கு வழங்கவிருந்தது. எனினும் அரசு சார்பில் இதற்காக எந்த முனைப்பும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இந்தநிலையில் வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் இந்த நிதியை அமைச்சரவை அங்கீகரித்து உடன்படிக்கைக்குச் செல்லவில்லை எனின் இந்த நிதி மீளப் பெற்றுக் கொள்ளப்படும் என்று அமெரிக்க அதிகாரி ஜெனர் எடிமான் தெரிவித்துள்ளார்.

இந்த உதவித் திட்டத்தைப் பெறுவதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு முனைப்பு காட்டினாலும் ஜனாதிபதி இதற்கு இன்னும் உடன்படவில்லை. இந்த உடன்படிக்கை நாட்டின் நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

northern PC Park
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park
0777570124 0215675566
0773366443 0212229581
0766999597 0212222050
0717772377 0212220388

# நியூஸிலாந்து அணி இன்னிங்ஸ் வெற்றி!

இலங்கை மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில், நியூஸிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 65 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம், இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை, நியூஸிலாந்து அணி 1 - 1 என்ற கணக்கில் சமநிலைப் படுத்தியுள்ளது.

கொழும்பு பி சாரா ஓவல் மைதானத்தில் 22ஆம் திகதி ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற, இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸிற்காக 244 ஓட்டங்களை பெற்றது.

இதன்போது, இலங்கை அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக தனஞ்சய டி சில்வா 109 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 65 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சு சார்பில், டிம் சவுத்தீ 4 விக்கெட்டுகளையும், ட்ரென்ட் போல்ட் 3 விக்கெட்டுகளையும், கொலின் டி கிராண்ட் ஹோம், வில்லியம் மோமார்வில்லே மற்றும் அஜாஸ் பட்டேல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூஸிலாந்து அணி, 6 விக்கெட்டுகளை இழப்புக்கு 431 ஓட்டங்களை பெற்றிருந்த போது, முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக டொம் லதம் 154 ஓட்டங்களையும், வாட்லிங் ஆட்டமிழக்காது 105 ஓட்டங்களையும், கொலின் டி கிராண்ட்ஹோமி 83 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.



இலங்கை அணியின் பந்து வீச்சு சார்பில், தில்ருவான் பெரேரா 3 விக்கெட்டுகளையும், லசித் எம்புல்தெனிய 2 விக்கெட்டுகளையும், லஹிரு குமார 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

187 ஓட்டங்கள் பின்னிலையில், தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி, போட்டியின் இறுதிநாளான நேற்று முன்தினம் போட்டியைச் சமநிலை செய்யும் முனைப்பில் இலங்கை அணி களமிறங்கியது.

எனினும், அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்த இலங்கை கிரிக்கெட் அணி, 122 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன்மூலம், நியூஸிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 65 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம், ஆசிய நாடு அல்லாத நாடொன்று இலங்கை மண்ணில், இன்னிங்ஸ் வெற்றியை பதிவு செய்த நான்காவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இதற்கு முன்னதாக 1993ஆம் ஆண்டு கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்ற போட்டியில், தென்னாபிரிக்கா அணி, 208 ஓட்டங்கள் மற்றும் இன்னிங்ஸ் வெற்றியை பதிவு செய்திருந்தது.

இதில் இலங்கை அணி சார்பில், அதிகபட்ச ஓட்டமாக நிரோன் டிக்வெல்ல 51 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சு சார்பில், ட்ரென்ட் போல்ட், டிம் சவுத்தீ, அஜாஸ் பட்டேல் மற்றும் வில்லியம் சோமர் வில்லே ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், கொலின் டி கிராண்ட்ஹோமி 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதன்போது 2 விக்கெட்டுகளை வீழ்த்திய டிம் சவுத்தீ, டெஸ்ட் கிரிக்கெட்டில் 250 விக்கெட்டுகள் என்ற மைல்கல்லை எட்டினார். இதன்மூலம் 250 விக்கெட்டுகளை வீழ்த்திய நான்காவது நியூஸிலாந்து வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக நியூஸிலாந்து அணி சார்பில், 154 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட டொம் லதம் தெரிவுசெய்யப்பட்டார்.

27 வயதான டொம் லதம் இறுதியாக விளையாடிய தனது எட்டு இன்னிங்ஸுகளில் நான்கு தடவைகள் 150 இற்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையைச் சொந்த மண்ணில் வீழ்த்துவது சுலபமான காரியமல்ல

இலங்கை அணியை அவர்களது சொந்த மைதானத்தில் வீழ்த்துவது சுலபமான காரியமல்ல என நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு -பி. சாரா ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இலங்கை மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், நியூஸிலாந்து அணி, இன்னிங்ஸ் மற்றும் 65 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே வில்லியம்சன் இதனைக் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

காலி மைதானத்தை விடவும் பி. சரா ஓவல் மைதானம் வித்தியாசமான ஆடுகளம். பந்து சற்று வேகமாக வருகிறது. பிற்பகுதியில் துடுப்பெடுத்தாடுவது சற்றுக் கடினமானது. எனினும் எமது வீரர்களின் துடுப்பாட்டம், இணைப்பாட்டம், அணியை வலுவான நிலைக்கு கொண்டுவந்தது.

எல்லா போட்டிகளும் வித்தியாசமானது. எம் முன்னால் இருப்பதை எதிர்கொள்ள வேண்டும். காலியில் நாம் அதிக பின்னடைவைச் சந்தித்தோம்.

இலங்கையை அவர்களது சொந்த மைதானத்தில் வீழ்த்துவது மிகக் கடினமான ஒன்று. அவர்கள் காலியில் சிறப்பாக விளையாடினார்கள்.

நாங்கள் வெற்றியை நெருங்கினோம் என்றாலும் போதுமாக இருக்கவில்லை. இந்தப் போட்டியில் தவறுகளை சரிசெய்து இந்த முடிவை எம்மால் பெற முடிந்தது.

சுழல் பந்து வீச்சுக்கு சாதகமான காலி டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி சிறப்பாக விளையாடியது. இரு அணிகளும் சிறப்பாக விளையாடின.

இரு அணிகளும் 1 – 1 என தொடரை சமநிலை செய்தது. மூன்றாவது போட்டி இருந்தால் நல்லது. ஆனால் இந்த வெற்றிக்கு இரு அணிகளும் தகுதியானவை' என கூறினார்.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி, டெஸ்ட் மற்றும் ரி – 20 தொடர்களில் விளையாடுவதற்காக இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.




இதில் இரு அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், 1 – 1 என சமநிலைப் பெற்றுள்ளது.

அத்தோடு, இரு அணிகளுக்கும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கான 60 புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளன.

டெஸ்ட் தொடர் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், அடுத்ததாக இரு அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடர் நடைபெறவுள்ளது.

இதில் முதல் ரி – 20 போட்டி எதிர்வரும் செப்டம்பர் முதலாம் திகதியும், இரண்டாவது ரி – 20 போட்டி 3ஆம் திகதியும், மூன்றாவது ரி – 20 போட்டி 6ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. மூன்று போட்டிகளுமே கண்டி – பல்லேகலை மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ஐ)

## பிரிட்டன் கிரிக்கெட் அணியில் இணைந்த பிரபல தமிழக வீரர்



இந்தியாவின் தொடக்க ஆட்டக்காரும், தமிழகத்தைச் சேர்ந்தவருமான முரளி விஜய் ஞாயிற்றுக்கிழமை இங்கிலீஷ் கவுண்டி கிரிக்கெட் அணியான சோமசெற்றில் இணைந்துள்ளார் என்று அந்த கழகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தொடரின் இறுதி மூன்று கவுண்டி சாம்பியன்ஷிப் போட்டிகளில் முரளி விஜய் எங்கள் வெளிநாட்டு வீரராக கழகத்தில் இணைவார் என்று அறிவிப்பால் மகிழ்ச்சி அடைவதாக சோமசெற் தங்கள் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த மாத தொடக்கத்தில் பாகிஸ்தானால் திரும்ப அழைக்கப்பட்ட அசார் அலிக்கு பதிலாக முரளி விஜய் அணியில் இணைவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

35 வயதான விஜய், 61 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 4000 ஓட்டங்கள் குவித்துள்ளார். அதிகபட்சமாக 167 ஓட்டங்கள் அடித்துள்ளார். கடந்த பருவத்தில் எசெக்ஸ் அணிக்காக மூன்று கவுண்டி சாம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கேற்று 320 ஓட்டங்களுக்கு மேல் அடித்தார்.

கவுண்டி சாம்பியன்ஷிப்பிற்கு சோமசெற்றுக்கு உதவ முயற்சிக்கும் சவாலைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். சோமசெற் ஒரு சிறந்த நற்பெயரைக் கொண்டுள்ளது, மேலும் அவர்கள் எதை அடைய முயற்சிக்கிறார்களோ அதில் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன் என்று விஜய் கூறினார்.

கடந்த ஆண்டு எசெக்ஸ் அணிக்காக சாம்பியன்ஷிப்பில் விளையாடிய அவருக்கு தொடரின் நிலைமைகள் பற்றிய அனுபவம் உள்ளது, மேலும் அசாருக்கு பதிலாக ஒருவரைத் தேர்ந்தெடுப்பது எங்களுக்கு மிகவும் முக்கியமானது என்று சோமசெற் சிசிசி கிரிக்கெட் இயக்குநர் ஆண்டி ஹர்ரி கூறினார்.

# கோட்டாபய வெள்ளை வானில் தன்னையும் கடத்த முயன்றார் என்கிறார் குமார வெல்கம



கொழும்பு,ஓக.28

கோட்டாபய ராஜபக்ஷ வெள்ளை வானில்தன்னையும் கடத்தவிருந்தார் என, நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம பரபரப்புத் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் தன்னையும் வெள்ளை வானில் கடத்த திட்டமிடப்பட்டதாக அவர் இணையத் தளம் ஒன்றுக்குத் தகவல் வெளியிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தின்போது குமார வெல்கம அமைச்சுப் பதவியை வகித்திருந்தவர்.

பொதுஜன பெரமுன கட்சியின் முக்கியஸ்தராகச் செயற்பட்டு வந்த அவர் அக்கட்சியின் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷவை மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்துள்ளமைக்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தார் என்பதும், அதையடுத்து அதிருப்தியினால் மீண்டும் சுதந்திரக் கட்சி பக்கம் அவர் திரும்பி விட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

# வேட்புமனுத் தாக்கலின் பின்பே யாருக்கு ஆதரவு எனத் தீர்மானம்

## அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கருத்து

கொழும்பு, ஓக. 28

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின்னரே யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்கப் போவதாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இதுவரை வேட்பாளர் குறித்து எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. கட்சியே அது குறித்த முடிவை எடுக்கும். தேர்தல் நடைபெறும் திகதி இதுவரை அறிவிக்கப்படவில்லை. வேட்புமனு கோரலுக்கான திகதியும் இதுவரை அறிவிக்கப்படாத நிலையில் இரண்டு கட்சிகள் மாத்திரம் தத்தமது வேட்பாளர்களை அறிவித்துள்ளன.



எனவே அனைத்து கட்சிகளும் வேட்பாளர்களை அறிவித்த பின்னர் அவர்களில் நாட்டுக்கும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பக்கூடியவர் யார் என்பதை தீர்மானித்த பின்னர் முடிவை அறிவிப்பேன் – என்றார்.

சஜித் பிரேமதாஸ தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு கலந்துரையாடியுள்ளார். அவ்வாறு உங்கள் கட்சியுடனும் பேசினாரா என ஊடகவியலாளர்கள் இதன்போது வினவினர்.

அவ்வாறு எதுவும் கலந்துரையாடப்படவில்லை என அவர் பதிலளித்தார். (ஐ)

## கோட்டாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எனும்வாகனத்தில் பயணிக்கஏறியுள்ளவர்கள், ஒவ்வொரு தரிப்பிடத்திலும் நால்வர், ஐவர் என இறங்கிக் கொள்கின்றனர். எமக்கு இப்போது இணைந்துகொள்ள முடியுமானஒரேமுகாம்கோட்டாபய ராஜபக்ஷவினுடையது மாத்திரமே எனவும் அவர் குறிப்பிட்டார்.

## மாலைதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லான இருதரப்பு உறவுகள், பல்வேறுதுறைகளில் புதிய கூட்டாண்மைகளை உருவாக்குதல் மற்றும் இரு நாடுகளை பாதிக்கும் பிராந்திய மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்துகருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## ஒருமித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் சஜித் –

நாட்டு மக்களை சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என வேறுபடுத்துவது நியாயமற்றது.

எவ்வாறாயினும் ஒருமித்த இலங்கை என்ற கொள்கையில் எந்தவித விட்டுக்கொடுப்பும் செய்துக்கொள்ளப்படாது.

ஒருமித்த இலங்கை என்பது எழுத்தப்பட்ட ஆவணமாக மாத்திரம் இருக்க கூடாது. மாறாக அதனை ஒவ்வொரு இலங்கையர்களும் மன ரீதியான உணர வேண்டும்.

நாட்டில் உள்ள அனைத்து மக்களையும் இலங்கையர்கள் என்றஅடிப்படையிலேயேநோக்குகிறேன்.

இவற்றை முன்னெடுக்க வேண்டுமாயின் இனவாதத்தை நாட்டில் இருந்து முற்றாக ஒழிக்க வேண்டும் – என்றார். (ஐ)

## உயர்தரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

இது அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. முதற்கட்ட நடவடிக்கைகளுக்காக 12 பாடசாலைகள் முற்றுமுழுதாக மூடப்படுகின்றன. 26 பாடசாலைகள் பகுதியளவில் மூடப்படவுள்ளன எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் மூன்று கட்டங்களாக இடம்பெறவுள்ளன எனவும் திணைக்களம் மேலும் கூறியுள்ளது.

இதேவேளை, இப்பணிகளுக் காகமுற்றாகமூடப்படும்பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் 16 ஆம் திகதி திறக்கப்படும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## சஜித்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராதனை பல்கலைக்கழகத்தின் சமூக அறிவியல் ஆய்வுகள் பிரிவு மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

பேராசிரியர் சிசிரா பின்னவல அவர்களின் தலைமையில் இந்த ஆய்வு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் பேராசிரியர் சிசிர பின்னவல ஊடகங்களுக்குத் தகவல் வெளியிட்டுள்ளார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வோம் எனவும், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் இராணுவ முகாம்கள் நீக்கப்படாது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா கூறியிருந்தார். இதுகுறித்து கருத்து வெளியிட்ட போதே, இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான சந்திப்பின்போது,தங்களதுவிசனத்தை வெளிப்படுத்துவோம் என மாவை சேனாதிராசா எம்.பி. கூறினார்.

அதேவேளை, வடக்கு, கிழக்கு தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் காணி விடுவிப்புகள் குறித்தும் அரச அதிகார சபைகளினால் அண்மைகாலத்தில் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பு நடவடிக்கைகள் குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் உயர்மட்டக் கூட்டத்தில் எடுத்துரைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து வடக்கு அபிவிருத்தி விடயங்கள் குறித்து கலந்துரையாடியிருந்தனர்என்பதுகுறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.முன்னணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளன. இதற்காக வேண்டி, ஐக்கிய தேசிய முன்னணி அவசரப்பட வேண்டிய தேவை இல்லையெனவும், இன்னும் போதியளவு கால அவகாசம் காணப்படுவதாகவும் அமைச்சர் மனோ கணேசன் இந்தக் கூட்டத்தின் பின்னர் தெரிவித்தார்.

ஆனால், இந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய கூட்டுக் கட்சிகளின் தலைவர்களான அமைச்சர்கள் ஹக்கீம், மனோகணேசன், திகாம்பரம்,சம்பிக்கரணவக்கபோன்றோர் ஜனாதிபதி வேட்பாளரை உடனடியாக அறிவிக்கும்படி ஒற்றைக் காலில் நின்றனர் என்றும் –

தமது ஐ.தே.கட்சிக்குள் இது பற்றிய கலந்துரையாடல் நடைபெற்று வருகின்றமையால் சில தினங்களில் அது குறித்து முடிவெடுத்து அறிவிக்கப்படும் என்றும் –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிச் சமாளித்தார் என அறிய வந்தது.

இந்தக் கூட்டத்தில் அரச பங்காளிக் கட்சி ஒன்றின் தலைவரான ரிஷாத் பதியுதீன் பங்குபற்றவில்லை என்றும் –

அவர் ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராகக் களமிறங்குகின்றமையை விரும்புகின்றார் என்றும் – கூறப்பட்டது.

## சஜித்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டமையினாலேயே இருவரிடமும் விளக்கம்கோருவதற்கு ஒழுக்காற்று நடவடிக்கை குழு தீர்மானித்துள்ளது.

ஒழுக்காற்றுநடவடிக்கையின் ஆரம்ப கட்டநடவடிக்கையாகவே இது பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பான அறிவித்தல் கடிதம் மேற்படி இரு அமைச்சர்களுக்கும் கட்சியின் பொதுச்செயலாளரால் நேற்றுஅனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 9 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எழுத்து மூலம் விளக்கமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கட்சியாப்பின் 6 சரத்துகளை அப்பட்டமாக மீறும் வகையில் இருவரும் செயற்பட்டுள்ளனர் என அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாசவை களமிறக்க வேண்டும் என சுஜீவ சேனசிங்கவும், அஜித் பி. பெரேராவும் வலியுறுத்திவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆர்)

## கை - மொட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான பரந்துபட்ட கூட்டணியமைத்தலுக்கான 7ஆம் கட்டப்பேச்சு இணக்கப்பாட்டுடன் நிறைவு பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் அலுவலகத்தில் நேற்று முற்பகல் இந்தப் பேச்சு நடைபெற்றது.

இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி., ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர எம்.பி. மற்றும் லசந்த அழகியவண்ண எம்.பி. ஆகியோர் பங்கேற்றனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனசார்பில் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் டலஸ் அழகப்பெரும எம்.பி. ஆகியோர் கலந்துகொண்டனர்.

பரந்துபட்ட கூட்டணியமைத்தல் தொடர்பில் இதற்கு முன்னர் 6 தடவைகள் நடத்தப்பட்ட பேச்சுக்களில் இழுபறி நிலை காணப்பட்டது. எனினும், பரந்துபட்ட கூட்டணி விவகாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளிவைக்கும்நோக்கில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் நேற்றைய பேச்சு நடைபெற்றது.

நேற்றைய பேச்சு வெற்றிகரமாக நடைபெற்றது எனவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் நேரில் சந்தித்துப் பேசுவதற்கு இதன்போது இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது எனவும் பஸில் தெரிவித்தார். (ஐ)

## இன்டர்போல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிட் அந்தச் சம்பவம் தொடர்பாக எடுக்கப்பட்ட வெற்றிகரமான நடவடிக்கைகள் குறித்து இன்டர்போலின் பொதுச் செயலாளர் ஜூர்ஜன் ஸ்ரோக் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் முப்படையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினருக்கும் இலங்கைப் பொலிஸாருக்கும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகைதந்துள்ள இன்டர்போலின் பொதுச் செயலாளர் நேற்று முற்பகல் ஜனாதிபதியை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போதே அவர் மேற்படி பாராட்டுக்களை தெரிவித்து விசேட பரிசொன்றை ஜனாதிபதிக்கு வழங்கினார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலின் பின்னர் விசாரணை நடவடிக்கைகளுக்கு உதவுமாறு இன்டர்போலுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு உடனடியாக பதிலளித்தமை தொடர்பில் இதன்போது பொதுச் செயலாளருக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, குற்றவாளிகளுக்கு எதிராகப் போராடுவதற்காக வழங்கிய உதவிகளை பாராட்டினார்.

இலங்கைப் பொலிஸாரும் புலனாய்வுத்துறை அதிகாரிகளும் உயர்ந்த தொழில்வாண்மையுடன் செயற்படுகின்றனர் எனவும் இன்டர்போல் நிபுணர்களுக்குத் தேவையான முழுமையான உதவி அவர்களிடமிருந்து கிடைப்பதாகவும் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளில் ஒளிந்திருக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் நிதி தொடர்பான குற்றவாளிகளை நாடு கடத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக உதவி வழங்குமாறும் ஜனாதிபதி இதன்போது இன்டர்போல் பொதுச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்தார். இதற்கு முழுமையான உதவிகளை வழங்குவதாகப் பொதுச் செயலாளர் ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்.

போதைப்பொருள்களை கண்டறியும் புதிய தொழிநுட்ப உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளுதல் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு தேவையான அறிவை பெற்றுக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக எதிர்காலத்தில் உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளல் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன, பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் சாந்த கோட்டேகொட, பதில் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன, இன்டர்போல் உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட பாதுகாப்புத் துறை மூத்த அதிகாரிகள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர் – என்றுள்ளது. (ஐ)

## மைத்திரிபாலவைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைச் சந்தித்தார்.

அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் ஜனாதிபதியைச் சந்திக்கும் சம்பிரதாயத்தின்படி இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் இராணுவத்தளபதியால் ஜனாதிபதிக்குநினைவுப்பரிசொன்றும் வழங்கப்பட்டது. (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.08.2019 இல் வெளியிடப்பெற்றது.